விலை: 30.00
பக்கங்கள் : 12+12
viber : 076 636 3378

# வலம்புரி
Valamburii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 091 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை (20.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

eDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
www.edus.lk | 0777 123 330

## 400 கிராம் பால்மா 790 ரூபாயாக உயர்வு




(கொழும்பு)
400 கிராம் பால்மாவின் விலை 250 ரூபாயினால் அதிகரித்துள்ளது என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.
அதன்படி 400 கிராம் 11

## அதிகரித்த பால்மா விலை
## ஹோட்டல்களில் இனி தேநீர் விற்கப்படாது

(கொழும்பு)
நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் அத்தியாவசிய பொருட்களின் 11

# நயினாதீவு ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனம்

## சன்னாஸ் பத்திரம் பிரதமரால் வழங்கிவைப்பு

(யாழ்ப்பாணம்)
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
அதற்கான சன்னாஸ் பத்திரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் வழங்கி வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் நயினாதீவு ரஜமஹா விகாரைக்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முதலில் அமரபுர மஹா சங்க சபையின் 11



## வடக்கு மக்களை பாதுகாத்து
# அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்
## யாழில் பிரதமர் மகிந்த தெரிவிப்பு



*(யாழ்ப்பாணம்)* வடக்கு மக்களைப் பாதுகாத்து அந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழில் வைத்து தெரிவித்துள்ளார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

## சாவகச்சேரியில் இளம் யுவதி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி - சிவன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் நேற்று சனிக்கிழமை அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலைய 11

## தனங்கிளப்பில் கார் விபத்து
### ஒருவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு ஏ32 வீதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் சம்பவ இடத்தி 11

## பிரதமர் மகிந்தவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டுவிலில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டுவிலில் இன்று காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் யாழ்.வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னர் நல்லூரில் ஏற்பாடாகியிருந்த போராட்டம் மட்டுவில் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
மட்டுவில் வண்ணாத்திப் பாலம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலைய முன்றலில் இன்று காலை 9 மணிக்கு போராட்டம் முன்னெடுக்க தீர் 11

## அதிகளவான போதை
## யாழில் இளைஞன் உயிரிழப்பு
### 2 வாரங்களில் இரண்டாவது சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழில் ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டுவாரங்களுக்குள் இரண்டாவது இளைஞர் போதைப் பொருளை அதிகளவு எடுத்துக் கொண்ட 11

### மண்ணெண்ணெய் வாங்க
## வரிசையில் காத்திருந்த முதியவர் மரணம்
### 5 மணி நேரம் வெயிலில் காத்திருந்தார்

(கண்டி)
கண்டியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் மண்ணெண் 11

## முல்லை சிறுமிகள் இருவர் துஷ்பிரயோகம்
### பேஸ்புக் காதலால் விபரீதம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவைச் சேர்ந்த பதின்ம வயது சிறுமிகள் இருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.
பேஸ்புக் காதலால் மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது.
இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.
முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியைச் சேர்ந்த 14 மற்றும் 15 வயதுடைய இரண்டு சிறுமிகள் கடந்த 16ஆம் திகதி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்திலுள்ள மொத்த சில்லறை வியாபார நிலையம் ஒன்றுக்கு ஆண் வேலையாள் தேவை.

(தென்மராட்சி பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

(C-4020)

தொடர்பு:- 077 969 8914

## வேலையாட்கள் தேவை

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- பொதி சுமப்பவர்
- பொதி செய்பவர்
- உதவியாளர்கள்
- அலுவலக உதவியாளர் (பெண்)

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை (21 - 40) இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல. 58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 4766

(10664)


# பரந்தனில் விபத்து

(பரந்தன்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் பகுதியில் உழவு இயந்திரமும் பிக்கப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பிக்கப்ரக வாகன சாரதி உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி புளியம்பொக்கணை ஆலயத்திற்கு சென்று திரும்பி யாழ். நோக்கி சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரம் மற்றும் யாழிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த பிக்கப்ரக வாகனத்துடன் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதோடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம)

# இந்திய பிரதமர் மோடியின் யாழ். பயணம் இரத்து

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த மாத இறுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில், இறுதி நேரத்தில் அந்த பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது சம்பந்தமான எந்த காரணமும் இந்திய தரப்பில் இருந்து வெளியிடப்படவில்லை என அறியவருகிறது.

இந்திய பிரதமர் மோடி யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வரவும் அதன் பின்னர் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை திறந்து வைக்கவும் அதன் பின்னர் பிம்ஸ்டெக் மாநாட்டில் உரையாற்றவும் திட்டமிடப்பட்டிருந்தது.

அத்துடன் பலாலி சர்வதேச விமான நிலையத்தை இந்திய பிரதமர் மோடி மீண்டும் திறந்து வைப்பார் எனவும் தகவல்கள் வெளியாகி இருந்தன. இவ்வாறான நிலையிலேயே அவரது இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கான பயணத்தை இரத்துச் செய்து விட்டு இணையத்தள தொழில்நுட்பம் ஊடாக பிம்ஸ்டெக் மாநாட்டில் உரையாற்ற மோடி தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக தகவல் வெளியிடுவதை இந்திய உயர்ஸ்தானிகராலயம் தவிர்த்துக் கொண்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (ம)


## பண்ணை வாடகைக்கு

இராசபாதை வீதியில் 30 பரப்பு சுற்று மதிலுடன் பண்ணை வாடகைக்கு உண்டு.

- ஆடு, மாடு, கோழி வளர்க்கக்கூடிய கொட்டகைகள் உள்ளன.
- இரண்டு அறைகளுடனும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் உள்ளது.

♦ வாகனச் சாரதி வீட்டுத் தேவைக்கு வேண்டும்.

(10704)

T.P - 077 773 0567

17.03.2022 அன்று 739 ஆவது தன நிதானய சீட்டிழுப்பில் 10 இலட்சம் நெல்லியடியில் வெல்லப்பட்டுள்ளது!

விற்பனை முகவர் - T.சசிகரன் (N-220023)
யாழ். மாவட்ட முகவர் - V.டனீஸ்குமார்

சீட்டிழுப்பு இலக்கம் - 0739
அதிஷ்ட இலக்கங்கள் - 32 54 71 80

(C-4017)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த அல்லது வியாபாரம் பழக விரும்பும் ஆண் / பெண் பணியாளர் தேவை.

சிவகணேசன் றெக்ஸ்
இல. 41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(10705)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் (கந்தர்மடம், அன்னசத்திர லேன், நாவலர் வீதி) இருவர் கொண்ட சிறிய குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.

(10701)

076 977 4628

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 38 வயது திருமணமாகாத, செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

(Viber & Whatsapp)

(10697)

077 905 8615


## மரண அறிவித்தல்



மலர்வு 12 - 05 - 1939

உதிர்வு 14 - 03 - 2022

# பாலர் கந்தசாமி

(ஓய்வுபெற்ற வரைபடக் கலைஞர்)

கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலர் கந்தசாமி அவர்கள் கடந்த 14.03.2022 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலர் - சந்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரோஜா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பஞ்சாச்சரம் மற்றும் சிதம்பரப்பிள்ளை, மனோன்மணி, மகேஸ்வரி, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 15.03.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரணவாய் பூவரசந் திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4016)

மணியகாரன் தோட்டம்,
கரணவாய் தெற்கு. 077 167 9741

தகவல்: சகோதரர்கள்

## மரண அறிவித்தல்



# அப்புத்துரை ஶ்ரீரங்கநாதன்

( ஆயுர்வேத வைத்தியர், சமாதான நீதவான்,
முன்னாள் ஊழியர் - பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை )

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரபல விஷகடி வைத்தியர் காலஞ்சென்ற பொன். அப்புத்துரை அவர்களின் அன்பு மகன் அப்புத்துரை ஶ்ரீரங்கநாதன் அவர்கள் நேற்று (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இல. 977, திருநகர் வடக்கில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4012)

இல. 977, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ் விலையை 2000 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

**12.5 கிலோகிராம் நிறை யுடைய எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 2 ஆயி ரம் ரூபாவினால் அதிகரிக்கு மாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.**

12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு கொள்கலன் ஒன்றை விற்பனை செய்யும் போது 2,000 ரூபாய் வரை நட்டம் ஏற்படுவதாக லிட்ரோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நிறுவனத்தை கொண்டு செல்வதற்காக எரிவாயு விலையை அதிகரிப்பதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என லிட்ரோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போது 12.5 நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 2,675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும் இதற்காக லிட்ரோ நிறு வனத்திற்கு 4,662 ரூபாய் செலவாகுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (நி)

# மீண்டும் அதிகரிக்கும் பேருந்துக் கட்டணம்?

(கொழும்பு)

அடுத்த மூன்று மாத காலத்துக்குள் பேருந்து கட்டணம் மீண்டும் அதிகரிக்கக் கூடும்.

இதன்படி 25 வீதத்தால் பேருந்து கட்டணம் உயரும் எனவும், ஆரம்பக் கட்டணமாக 25 அல்லது 30 ரூபாய் நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.

வருடாந்த பேருந்து கட்டண மீளாய்வின் அடிப்படையிலேயே இந்தக் கட்டண உயர்வு இடம்பெறவுள்ளது.

அதேவேளை, நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து சில நாட்களுக்கு முன்னரே பேருந்து கட்டணம் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (நி)

## 'புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே'

# பிரதமருக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் முன்னணி போராட்டம்




(யாழ்ப்பாணம்)

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் யாழ். விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு ,அரசியல் கைதிகளை விடுதலை செய் என கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், கந்தரோடையில் புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே, நாவற்குழி சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்து போன்ற பல்வேறு கோஷங்களும் எழுப்பப்பட்டது.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(4-6-33-101-104)

# இரசாயன உர இறக்குமதி தனியாருக்கு தடையில்லை

(கொழும்பு)

இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தடையில்லை என விவசாய பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

விவசாயிகளுக்கு சிறுபோகத்திற்கு தேவையான கரிம உரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு எவ்வித தடையும் இல்லை என்றும் விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி)

# இந்தியாவை அடுத்து சீனாவிடம் கையேந்தியது இலங்கை

(கொழும்பு)

அந்நியச் செலாவணி நெருக்கடியை அடுத்து, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உள்ளிட்ட மேலதிக நிதி உதவியை இலங்கை சீனாவிடம் கோரியுள்ளது.

இந்த ஆண்டு சீன வங்கிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமான கடனை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடும் வரை இந்த கொடுப்பனவுகளை தாமதமாக செலுத்த சீனாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, உள்ளூர் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை வாங்குவதற்கான கடனையும் இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடனை இலங்கை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலாளர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய பசுபிக் கூட்டமைப்பிற்கு, அமெரிக்காவின் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பை காட்டும் நோக்கில் இந்த விஜயம் அமையவுள்ளது.

அதன்படி பங்களாதேஷ் மற்றும் இலங்கையிலும் டில்லியில் வெளிவிவகார அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடல்களையும், ஆலோசனைகளையும் நடத்தவுள்ளார்.



இந்த விஜயங்களின்போது, சிவில் சமூகம் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்தித்து பொருளாதார கூட்டணியை வலுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (நி)

# அதிகரிக்கும் எதிர்ப்பு அலைகள்

## அரசிற்கு 'குட்பாய்' சொல்லவும் தயங்கமாட்டேன்

# ஆளும் கட்சி எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

"நாட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அவர்கள் கண்டபடி எங்களைத் திட்டுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து, இது தொடர்பில் முறையிடவுள்ளோம். அவர் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் அரசுக்குக் "குட்பாய்" சொல்லுவோம்" என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான லலித் எல்லாவல.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்துள்ளேன். அப்போது மக்கள் என்னைத் திட்டவில்லை. தற்போது பாராளுமன்ற உறுப்பினராக உள்ளேன். மக்கள் திட்டுகின்றனர். காரணம், மக்கள் நெருக்கடியில் உள்ளனர்.

பட்டினியில் வாழ முடியாது. எனவே, ஜனாதிபதியைச் சந்தித்து இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தவுள்ளேன். ஜனாதிபதியால் காத்திரமான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நாங்கள் முடிவொன்றை எடுக்க நேரிடும். அரசுக்குக் "குட்பாய்" சொல்லவும் தயங்க மாட்டோம்" என்றும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணம் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்




சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன். அணிகளின் போரின் தொடர்ச்சியான 29 ஆவது தடவையாக ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 மட்டுப்படுத்தப் பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் வருடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு ஏ.எப்.டெஸ்வினும் யாழ்ப்பாண கல்லூரிக்கு என்.விஷ்ணுகாந்தும் தலைமை தாங்கிய நிலையில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 163 ஓட்டங்களை பெற்றது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் ஏ.நிகரிலன் 69 ஓட்டங்களையும் ஏ.கௌசிகன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் எஸ்.கீர்த்தனன் 4 விக்கெட்டுக்களையும் சமிந்தன் மற்றும் சவுத்தியன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

164 என்கிற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 44.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில், எஸ்.சமிந்தன் 28 ஓட்டங்களையும் ஜே.திவிகரன் 22 ஓட்டங்களையும் பெற்றதுடன் பந்து வீச்சில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பி.பிருந்தன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மதுசன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

இதன்மூலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி அணி 48 ஓட்டங்களினால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி 29 ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. (4-6-33)

---

16 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான 800 மீற்றர் ஓட்டத்தில் சென் ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.ஆகாஷ் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.




யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டிகள் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் யா/சென்ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.ஆகாஷ் தங்கப்பதக்கத்தையும், சென்ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சி.அபிலாஷன் வெள்ளிப் பதக்கத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ராகுல் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (படம்-கனகராஜா)

---


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

## வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனுத் தாக்கலும்

### வருடாந்த பொதுக்கூட்டம் 2022/2023

**காலம்:** 2022.04.24 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம் :** காலை 10.00 மணி
**இடம் :** கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
**தலைமை :** திரு. விக்னேஸ்வரன் தயாபரன்

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 01.04.2022ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

**தபால் முகவரி** : செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

### 2022/2023 காலப் பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வேட்புமனுத் தாக்கல் செய்தல்

- சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.
- 2022/2023ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது சங்க அமைப்பு திட்ட விதி உபபிரிவு 6.2இன் பிரகாரம் நிர்வாக சபை தெரிவு தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதால் சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.1 இல் உள்ளவாறான பதவிகள் மற்றும் யாப்பு விதி உப பிரிவு 15.1 இன் பதவி அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்புமனுவை பாடசாலை அலுவலகத்தில் 23.03.2022ஆம் திகதி புதன்கிழமை முதல் 31.03.2022ஆம் திகதி வியா ழக்கிழமை வரையிலான நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையிலான காலப்பகுதியில் பெற்று, பூரணப்படுத்திய வேட்புமனுவை 01.04.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.
- தங்கள் வேட்புமனுவினை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல் கடிதத்தினை தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு

**காலம்** : 2022.04.24 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்** : பி.ப 1.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை
**இடம்** : கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(C-4019)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம்
**அறிவுத்திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி...!**

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்று பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய 'மனவளக்கலையை'

## இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்ப்பம்
- அடுத்துவரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்

**அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்.**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- **உடல்நலத்திற்கு** → **எளிய முறை உடற்பயிற்சி**
- **உயிர்வளத்திற்கு** → **சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி**
- **மன அமைதிக்கு** → **தியான பயிற்சிகள்**
- **அறிவு வல்லமைக்கு** → **அகத்தாய்வு பயிற்சிகள்**
- **உறவுகள் மேம்பட** → **தற்சோதனைப் பயிற்சிகள்**

**காலம்:-** 19.03.2022-25.03.2022 (சனிக்கிழமை–வெள்ளிக்கிழமை)
**நேரம்:-** மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
**பயிற்சியை வழங்குபவர்:-**
துணைப் பேராசிரியர் **அருள்நிதி த.நந்தகுமரன்,**
துணைப் பேராசிரியர் **ந.ஜெயகிருஷ்ணா** மற்றும்
**அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,**
**அருள்நிதி க.ஜெயராணி**

*வருக வருக! நலம் பெருக! பெறுக!*
வாழ்க வையகம் ; வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309**

(C-4018)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மனோன் மணிசனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல்-2 மணி வரை கொக்குவில் நந் தாவில் கற்புலத்து மனோன் மணி அம்மன் கோவில் அருகாமையில் அமைந்துள்ள மனோன் மணி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை

## ஜூன் மாதம் நடத்த அரசு தீர்மானம்

### தென்னிலங்கை ஊடகம் தகவல்

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்தத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆலோசித்து வருகின்றது. இது தொடர்பில் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (நி)

# பணவீக்கம் மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள பாரிய அதிகரிப்பு நாட்டில் பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளா தார பிரிவின் சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் பணவீக்கம் சுமார் 25 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பணவீக்கம் பெப்ரவரியில் 16.8 வீதமாக உயர்ந்துள்ளது, இது ஆசியாவிலேயே அதிகூடியதாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# அரசாங்கத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இல்லை- அமரவீர



(கொழும்பு)

எந்த நேரத்திலும் அரசாங்கத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கூட இல்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர் பதவி விலகினால் புதிய ஜனாதிபதியை பாராளுமன்றமே நியமிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளைய தினமே பதவியை விட்டு வெளியேறினாலும், நாடு ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல முடியாது.

புதிய ஜனாதிபதி ஒருவரை பாராளுமன்றமே நியமிக்க முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கூட, எந்த நேரத்திலும் அரசாங்கத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை எனத் தெரிவித்தார். (நி)

# 13 ஆண்டுகளின் பின்

## தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

தேயிலை உற்பத்தியானது. 13 ஆண்டுகளின் பின்னர் வீழ்ச்சிப்போக்கில் பதிவாகியுள்ளது

கடந்த பெப்ரவரி மாதம் நாட்டின் தேயிலை உற்பத்தி. 18.16 மில்லியன் கிலோகிராமாக பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில். சுமார் 20 சதவீத வீழ்ச்சியாகும் என தேயிலை சபையின் தரவுகளின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12.8 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில். அதன் பின்னர் மாதமொன்றில் பதிவான ஆகக்குறைந்த தேயிலை உற்பத்தி இதுவாகும் என தேயிலை தரகு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட இரசாயன உரத்தடை இதற்கு காரணமாகும் என குறிப்பிடப்படுகிறது.

இரசாயன உரத்தடைக்கு முந்தைய காலத்தில், இலங்கையின் வருடாந்த தேயிலை ஏற்றுமதி மூலம் 1.3 பில்லியன் டொலர் வருவாய் கிடைத்தது.

இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்யும் முக்கியமான கொள்வனவாளர்களான ரஷ்யாவும், உக்ரைனும், நாட்டின் தேயிலை உற்பத்தியில் 10 சதவீதத்தை இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

20.03.2022
பங்குனி 06, ஞாயிற்றுக்கிழமை
துதியை முற்பகல் 11.52 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.21 மணிவரை
சுபநேரம்- 9.18-10.48 மணிவரை
இராகுகாலம் -4.48-6.18 மணிவரை
சிட்டுக்குருவி தினம்
சந்திராஷ்டமம்-
பூரட்டாதி,உத்தரட்டாதி.

வளவன்

**மேஷம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்களின் தகுதியை உயர்த்தும்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல்நலனில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருச்சிகம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், சயனசுகக் குறைவான நாள், ரோக பயமுண்டு.

**கும்பம்:** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய நட்புகள் தேடிவரலாம்.

**தனுசு:** குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கீட்டு அட்டைக்கு சிலிண்டர் விநியோகம்



(கரணவாய்)

எரிவாயுவிற்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை நகரில் எரிவாயு முகவர் நிறுவனத்தினால் பொதுமக்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிவாயு சிலிண்டரை பெற்றுக் கொண்டனர்.

இம்முறை வர்த்தக நிலையங்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாது முகவர்கள் நேரடியாக பருத்தித் துறை நகருக்கு வருகை தந்து, பங்கீட்டு அட்டையில் பதிவு செய்து ஒரு குடும்பத்திற்கு ஒரு சிலிண்டர் வீதம் வழங்கப்பட்டது. (4-6-60)

# அமைச்சர் டக்ளஸுக்கு கொரோனா



(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழிற்கான விஜயம் மேற்கொண்டிருந்த போது, நாகதீபத்திற்கான விஜயத்தை நேற்று மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்டிருந்த, அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. அதன் பின்னர், பிரதமருடனான பயணங்கள் ரத்து செய்யப்பட்டன. (4-6-33-101)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

தற்போது காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமைகளின் கீழ் https:// dmtappointme nts.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களை பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம்,தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அலுவலக பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (4-6)

# மணவாளக் கோல உற்சவமும் சங்கடஹர சதுர்த்தி உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அந்தவகையில் காலை 8 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும், மூலமூர்த்தி பூஜை.வசந்த மண்டப பூஜை நடைபெறும். விநாயகப்பெருமான் உள் வீதி, வெளி வீதி வலம் வருவார். நாளை திங்கட்கிழமை சங்கடஹர சதுர்த்தி உற்சவம் மாலை 5.15 மணிக்கு நடைபெறும் எனவும்பிரதமகுருக்கள் அறிவித்துள்ளார். (4-6)




நயினாதீவுக்கு நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விஜயம் மேற்கொண்டு நயினாதீவு நாகபூஷணி அம்மனையும் விகாரையையும் தரிசித்தார். (படம்- சிவசாந்தன்)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

**பாஷையூர்சென்அன்ரனிஸ் றோ.க. மகளிர்வித்தியாலயம்**

ட.சஹானா-173, பௌ.சரோணா -154, ச.மேரி ஜெர்மியா-152 (4)



தெல்லிப்பழை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயப் பிலவ வருட மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்-ரவிசாந்)


# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் கருவி நிறுவனமும் இணைந்து நடத்தும் பிரபல ஊடகவியலாளர் பொ. மாணிக்கத்தின் "மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்" நூல் அறிமுக விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் திருமண மண்டபத்தில் இடம் பெறும். (4)



சங்கானை கோட்டக்கல்விக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளி சிறுவர் பாடசாலையின் 2022 ஆம் ஆண்டுக்கான சிறுவர் சந்தை சுழிபுரம் மேற்கு ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் ஆலய தேவஸ்தான வளாகத்தில் கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழு மற்றும் கலைமகள் முன்பள்ளி ஆசிரியர்களின் வழிநடத்தலில் இடம் பெற்றது. (படம்-கஜிந்தன்)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அம்பகாமம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் மற்றும் காணி அளிப்பு பத்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி அம்பகாமம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-தவசீலன்)

# கருத்துரைகளும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினசக் கட்சியின் வட பிராந்தியக் குழுவின் ஏற்பாட்டில் இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தீர்வுக்கான திசைமார்க்கமும் என்ற தலைப்பிலான பகிரங்க கருத்துரைகளும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புதிய ஜன நாயக மாக்சிச லெனினசக் கட்சியினர் அழைப்பு விடுக்கின்றனர். (4-6)



முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்களில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கான இந்திய அரசின் உதவியில் உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. (படம்-தவசீலன்)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கப் பேழை நூல் வெளியீடும், உலகத் தாய்மொழி நாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வடமாகாண மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 127 ஆவது இடம்

(ஜெனிவா)
ஐக்கிய நாடுகள் சபையின் 2022ஆம் ஆண்டுக்கான உலக மகிழ்ச்சி நாடுகள் அறிக்கையில் இலங்கை 127ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பட்டியலில் பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் 121வது இடத்தில் பாகிஸ்தானும், இந்தியா 136வது இடத்திலும், நேபாளம் 84வது இடத்திலும், வங்கதேசம் 94வது இடத்திலும் உள்ளன.

முதல் 20 இடங்களில் ஆசிய நாடுகள் எவையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# எண்ணெய் கப்பல் வருகிறது என்பதெல்லாம் பொய்

## உண்மையை வெளியிட்ட தொழிற்சங்கம்

(கொழும்பு)
கொழும்பு துறைமுகத்திற்கு போதியளவு எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் வந்துகொண்டிருப்பதாக துறைமுக அமைச்சர் தெரிவித்த தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றவை என அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது இரண்டு எரிவாயு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வெளியில் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக எரிவாயுவை இறக்குவதில் தடை ஏற்பட்டுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகள் தொடர்பில் இவ்வாறான பொய்களைப் பரப்பாமல் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும்.

இவ்வாறான பொய்களை நாட்டுக்கு கூறுவது எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரே தடவையில் தீர்க்கமுடியாது

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
நாட்டு மக்களின் பிரச்சினை தொடர்பாக தனக்கு சிறந்த புரிதல் இருப்பதாகவும் அவற்றை ஒவ்வொன்றாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கொலோன்ன பிரதேசத்தில் நடைபெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாடு மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கும் நேரம் என்பது உங்களுக்கு தெரியும்.

கொரோனாவை நாங்கள் மிக வெற்றிகரமாக எதிர்கொண்டோம். அதேபோல் வேறு பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ள காலத்தில் நாம் இருக்கின்றோம். அரசாங்கம் என்ற வகையில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் கடமை.

நாட்டு மக்களின் தேவைகளை அறிந்த தரப்பினரே தற்போது ஆட்சியில் உள்ளனர். ஒரே தடவையில், ஒரு நாளில், ஒரு மணி நேரத்தில் அல்லது ஒரு வருடத்தில் அனைத்தையும் செய்ய முடியாது.

எனினும் ஒவ்வொன்றாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக மக்களின் ஒத்துழைப்பு எமக்குத்தேவை என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (நி)

### தாமதமாக சமூகமளிப்பதற்கு சலுகை வழங்கவும்

(கொழும்பு)
நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி முடியும் வரை, அரச ஊழியர்கள் தாமதமாக வருவதற்கு சலுகை அல்லது முன்னர் பயன்பாட்டிலிருந்த வருகை பதிவு ஆவண முறையை பயன்படுத்துமாறு அரசாங்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கைவிடுத்துள்ளது. மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் உரிய நேரத்திற்கு பணிக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

வரவு வருகை பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது தாமதமாக வரும் ஊழியர்களுக்கு சலுகை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக அச்சங்கத்தின்பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன தெரிவித்துள்ளார். (நி)


## விசேட அறிவித்தல்

கடந்த 32 வருடகாலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு கிளைகளுடன் இயங்கிவந்த ஈஸ்வரன் ரேடர்ஸ், ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவிஸ், ஈஸ்வரன் பயணிகள் சேவை, ஈஸ்வரன் விரைவு பொதிகள் சேவை உட்பட எமது நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் மற்றும் சேவை தொடர்பாக ஆட்சேபனைகளோ அல்லது நிறுவனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் இம்மாதம் 31 ஆம் (31.03.2022) திகதிக்கு முன்னராக எமது நிறுவனத்தின் தலைமைக் காரியாலயமான இலக்கம் 201B டாம் வீதி கொழும்பு-12 அமைந்துள்ள ஈஸ்வரன் ரேடர்ஸ் நிறுவனத்துடன் நேரிலோ தொலைபேசி ஊடாகவோ தொடர்புகொண்டு தீர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஈஸ்வரன் நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர்**
**தியாகராஜா துவாரகேஸ்வரன்**
**தலைமைக்காரியாலயம்**
**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
**இல.201B டாம் வீதி, கொழும்பு - 12**

(10700)

தொடர்புகளுக்கு:
011 243 3889 / 011 243 5247
077 780 6573 / 077 7806 574 / 077 780 6583



## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01, 06 இற்கான மாணவர் அனுமதி - 2023

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 21.03.2022 முதல் 06.04.2022 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.04.2022 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

02. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

03. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (photocopy) இணைக்கப்பட வேண்டும்.

04. ஒரு படிவத்திற்கானதும் , பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபாய் 1500.00.

05. வயதெல்லைகள்:
அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2017 இற்கும் 31.01.2018 இற் குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2012 இற்கும் 31.01.2013 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 06 (தமிழ் மொழி மூலம்/இரு மொழி மூலம்) அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்.

07. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.

08. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 15.10.2022 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 06 இற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

அதிபர்கள் (C-4004)



## விற்பனைக்கு

தோட்டத்திற்கு போடப்படும் உக்கிய குப்பை, மாமர விறகு, உரித்த தேங்காய் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
077 129 1636

(10699)



## சொர்க்கம் திருமண சேவை

பிரான்ஸில் வாழும் 39 வயது உத்திர நட்சத்திர மணமகனுக்கும் அமெரிக்காவில் வாழும் 37 வயது 12 இல் செவ்வாய் சதய நட்சத்திர பொறியியலாளர் மணமகனுக்கும் இலங்கையில் மணமகளை தேடுகின்றோம்.


தொடர்புகளுக்கு:- 001 416 566 1855
077 887 6369
WWW.com.sorkam.com

(10698)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2022-13.04.2022



விடாப்பிடியாகச் செயல்பட்டு காரியத்தில் வெற்றி காணும் தனுசு இராசி வாசகர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு பகவான் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே நினைத்த காரியங்கள் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களின் ஆதரவால் நல்ல காரியங்களை நடத்திக் காட்டுவீர்கள்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். இது ஒருவழிக்கு நன்மை தான். கேந்திராதிபத்ய கிரகமான புதன் நீச்சம் பெறுவதால் தொழில் முன்னேற்றம் உண்டு. துணிந்து சில முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். வருங் கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வரன்கள் வாசல் தேடி வரும். வருமானம் திருப்தி தரும். வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகுவும், துலாம் இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பிள்ளைகள் வழியில், கல்வி, வேலைவாய்ப்பு தொடர்பாக நல்ல தகவல் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக ஏதேனும் பஞ்சாயத்துக்கள் நடைபெற்றால், அது உங்களுக்கு சாதகமாக அமையும். பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் உண்டு. உடல்நலத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்திற்கு செல்லும் புதனால், பிள்ளைகளின் திருமண முயற்சி, வேலைவாய்ப்பு வெற்றியாகும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். ஏழரைச் சனி நடப்பதால் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.




மாமன், மைத்துனர் வழியில் உறவுகள் பலப்படும்.

## அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும்

**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை சனியுடன் சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது கும்ப ராசியில் குருவுடன் இணைந்து 'குருமங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே இல்லத்தில் மங்கல காரியங்கள் நடைபெறும். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் வந்தடையும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளுக்கு படிப்பிற்கேற்ற வேலை அமையும். பணிபுரியும் பெண்கள், சுயதொழில் தொடங்க ஆர்வம் காட்டுவர். பிரபல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். சுய ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து, அதை தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மற்றவர்கள் பாராட்டும் படியாகப் பணிபுரியும் மகர இராசி வாசகர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. சனியோடு பகை கிரகமான செவ்வாய் இணைந்திருக்கிறார். எனவே மன அமைதி குறையும். பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும்.

## பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும்

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். இது ஒரு வழிக்கு நன்மைதான். உங்கள் இராசிக்கு 6-க்கு அதிபதி நீச்சம் பெறுவதால், உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை மேலதிகாரிகள் பெற்றுத்தருவர். 9-க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால், பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்படலாம். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வார்களா? என்பது சந்தேகம்தான். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதையும் அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசித்துச் செய்யுங்கள்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகுவும், துலாம் இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் ராகுவும், 10ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெற்றோர் வழி ஆதரவு குறையும். பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துக்கொள்வது நல்லது. வீட்டைப் பழுது பார்ப்பதில் கவனம் செலுத்துவீர்கள். பயணங்கள் பலன் தரும். கேது பலத்தால் உத்தியோகத்தில் சில இடையூறுகள் வந்தாலும், அதைச் சமாளித்து விடுவீர்கள். இக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள்.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ




ராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 4-ல் சஞ்சரிப்பது நல்லதுதான். பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் வரும். சொத்துக்களை பங்கு பிரித்துக் கொண்டு, அதில் வீடு கட்டும் முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். புதிய வாகனங்கள் வாங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்ப -செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை சனியுடன் இணைந்து சஞ்சரித்து வந்த அவர், இப்போது கும்ப ராசியில் இருக்கும் குருவுடன் இணைந்து 'குருமங்கள யோகத்தை உருவாக்கப் போகிறார். எனவே தொட்ட காரியங்கள் வெற்றியாகும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் வந்துசேரும். காரியங்கள் தடையின்றி நடைபெறும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை கைக்குக்கிடைக்கும்.

இம்மாதம் அஷ்டமி தோறும் வைரவரை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும். கணவன் - மனைவி உறவு பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளுக்கான உதிரி வருமானம் கிடைத்து உள்ளம் மகிழ்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும். ஆனால் அதற்கேற்ற ஊதியம் இருக்காது. 'புதிய வேலைக்கு விண்ணப்பிக் கலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் 'மகாத்மா' என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே.

– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சமையலுக்காக வாங்கிய காய்ந்த தென்னை ஓலை

இஃது ஓர் அன்பர் கூறிய தகவல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற சிங்கள மாணவர்கள் தனியார் வீடுகளிலும் பல்கலைக்கழக விடுதிகளிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் தங்கியிருக்கின்ற சிங்கள மாணவர்கள் அடுத்த வீட்டுக்குச் சென்று, காய்ந்த தென்னை ஓலை ஒன்றைத் தந்துதவுமாறு கேட்டு வாங்கிச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த பிரஸ்தாப அன்பர், எதற்காக உங்களுக்குத் தென்னை ஓலை என்று வினவியுள்ளார்.

அதற்கு அந்த சிங்கள மாணவர்கள் எரிவாயு தீர்ந்துவிட்டது.

மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு. எனவே காய்ந்த தென்னை ஓலை கொண்டு மதியம் சமைக்கப் போகின்றோம் என்றனர்.

அதற்கு அந்த அன்பர், உணவகங்களில் மதியச் சாப்பாட்டை எடுக்க முடியாதா? எனக் கேட்டார்.

அதற்கு அந்த சிங்கள மாணவர்கள் ஓ! சாப்பாட்டின் விலை தாங்க முடியவில்லை என்றனர்.

இந்தத் தகவலை அந்த அன்பர் கூறிய போது மிகவும் கவலையாக இருந்தது.

சமைத்துச் சாப்பிடுவதற்குக்கூட அந்த மாணவர்களுக்கு எரிவாயு கிடைக்கவில்லை.

தவிர, எல்லா மாணவர்களும் வசதியாக இருக்கிறார்கள் என்றும் நாம் நினைத்துவிட முடியாது.

ஏழைக்குடும்பங்களில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களும் நிறையவே உள்ளனர்.

இதில் தமிழ் – சிங்கள மாணவர்கள் என்ற பேதம் கிடையாது.

அந்த மாணவர்களின் பொருளாதாரக் கஷ்டநிலைகளை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகின்றது.

இதுவிடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள்; எரிவாயு விற்பனை முகவர்களுடன் தொடர்புகொண்டு, சம்பந்தப்பட்ட வெளிமாவட்ட மாணவர்களுக்கு எரிவாயு கிடைக்க ஏற்பாடு செய்வது அவசியமாகும்.

தவிர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற வெளிமாவட்ட மாணவர்களுக்கு; வீடுகளுக்கு சென்று வரக்கூடிய நம் தமிழ் மாணவர்கள் ஏதாவது வகையில் உதவி செய்ய வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

ஆம், சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த காலம் உண்டு.

தென்பகுதியில் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை வெட்டிச்சரித்தபோது, தமிழ் மக்களைத் தங்கள் வீடுகளில் தங்க வைத்துக் காப்பாற்றிய சிங்கள மக்களும் இருக்கின்றார்கள்.

ஆகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இதில் தமிழ் – சிங்களம் என்ற பேதமை இன்றி சக மாணவர்கள் உதவ வேண்டும் என்பதுடன் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் வேண்டும்.

இது எம் தமிழ் இனத்தின் உயர் சால்பு என்பதை எச்சந்தர்ப்பத்திலும் நாம் மறத்தலாகாது.

### அரசை பதவி விலக வலியுறுத்தி

## தேசிய மக்கள் சக்தியால் 23ஆம் திகதி மாபெரும் போராட்டம்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தை தேசிய மக்கள் சக்தி, எதிர்வரும் 23 ஆம் திகதி நுகேகொடையில் நடத்தவுள்ளது.

"மக்கள் சக்தியின் எதிர்ப்பு" எனும் தொனிப் பொருளின் கீழ் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஜே.வி.பி. உட்பட தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் அமைப்புகளும் பங்கேற்கவுள்ளன.

இதன்போது அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளது.

அத்துடன், தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. (ம)

## வாசுதேவ, விமல், உதய கம்மன்பில சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பு

(கொழும்பு)

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள சர்வ கட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி இந்த சர்வ கட்சி மாநாடு இடம்பெறவுள்ளது. இந்தநிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்தமுறை சர்வ கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த மாநாட்டில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரது கட்சிகளின் யோசனைகளும் பரிந்துரைகளும் கட்சியின் ஏனைய பிரதிநிதிகள் ஊடாக முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## கோவிட் தொற்றால் 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 16,426 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த மேலும் 5,247 பேர் பூரண குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம் கிருஷ்ணாமெடிகிளினிக்,மகாறம்பைக்குளம், சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நாவற்குழியில் பிக்குகள் தங்குவதற்கான கட்டடம் பிரதமரால் திறப்பு

யாழ்ப்பாணம் நாவற்குழி சமித்தி சுமண விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிக்குமார் தங்குமிடக் கட்டடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் இலங்கை இராணுவத்தினரின் பங்களிப்புடன்.இந்த தங்குமிடக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.


பிக்குமார் தங்குமிடக் கட்டடத்தை திறந்து வைத்த பிரதமர், அப்பகுதியில் உள்ள 50 கர்ப்பவதித்தாய்மார்களுக்கு 50 போசாக்கு உணவு பொதிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகள் 36 பேருக்கு பிரதமரினால் வீட்டு உரிமைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் - இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### துன்பங்கள் வந்தால், நன்மையாக முடியட்டும்



அப்போது பாவங்களில் இருந்து விடுதலை பெற்று. அதை மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு இயேசு உங்களுக்கு பலம் தருவார். இறைவன் தனது விருப்பம் நிறைவேறுவதற்காக நம்மை சில இக்கட்டான சூழ்நிலையைக் கடந்து செல்ல வைப்பதும் உண்டு.இதற்கு வேதத்தில் இருந்து ஒரு உதாரணத்தைக் காணலாம். சாமுவேலை தீர்க்கதரிசியாக உருவாக்கி, பலருக்கு வழிகாட்டியாக வைக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாக இருந்தது. இதை நடப்பிக்க, அன்னாள் என்ற பெண்ணின் கர்ப்பத்தை தேவன் தேர்ந்து எடுத்தார். ஆனால் அதை அவர் அடைத்து வைத்திருந்தார். (1 சாமு. 1:5). அன்னாளால் கர்ப்பம் தரிக்க முடியவில்லை என்பதால், கணவனின் மற்றொரு மனைவி பெனின்னாள் அவளைக் கடுமையாக கிண்டல் செய்தாள். இந்த நிந்தனைதான் அன்னாளை தேவாலயத்துக்கு போக வைத்தது. பெனின்னாள் செய்யும் கொடுமை பற்றி கணவனிடமோ அல்லது வேறு உறவினர்களிடமோ வெளிப்படுத்தி, அன்னாள் தற்காலிக மன ஆறுதல் பெறவில்லை.தேவாலயத்துக்குச் சென்று யாரையும் குற்றம் சாட்டி பிரார்த்திக்காமல், பிரச்சினையை இறைவனிடம் மட்டுமே வைத்தாள். 'நிந்தனை நீங்குவதற்கு ஒரு குழந்தை வேண்டும். ஆண் குழந்தை பிறந்தால் அதை இறைவனுக்கே அளிப்பேன்' என்று வாக்குறுதி கொடுத்தாள். அன்னாளுக்கு ஏற்பட்ட துன்பமே அவளை இப்படிப்பட்ட வாக்குறுதியை அளிக்க வைத்தது. இதன் அடிப்படையில் அவள் கர்ப்பத்தை இறைவன் திறந்தார். இறைவன் விரும்பிய தீர்க்கதரிசி சாமுவேல், அன்னாள் வயிற்றில் பிறந்தான். எனவே, பிரச்சினைகள் வரும் போது, அதனுடன் போராடாமல் இறைவனின் சந்நிதியில் அன்னாள் போல் சரணடைந்தால், ஒவ்வொருவரைப் பற்றிய இறைவனின் விருப்பமும் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரைச்சிபுளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயவருடாந்த பொங்கல் உற்சவவிழாவும் பண்டமெடுத்துவரும் பாரம்பரிய முறையும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (படங்கள்: தேவனாந்தன்)

# குற்றச்செயல்களில் ஈடுபட்ட 15 பேர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்திர திருவிழாவின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் ஆலய வளாகத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 15 பேரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோவில் வளாகத்தில் இரவு வேளை இருவர் கத்தியுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியமை, போதைப்பொருள் உடைமையில் வைத்திருந்தமை, மக்களின் சங்கிலியை அபகரித்தமை, மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குழு மோதலில் ஈடுபட்டமை என 15 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரிடமும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தருமபுர பொலிஸ் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (4-6-316)

## செயற்கைக்கால் பொருத்தும் முகாமில் கலந்துகொள்ள பதிவு செய்யவும்

(பனிக்கன்குளம்)

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்தில் கொண்டு ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் இம்மாதம் 13ஆம் திகதி ஆரம்ப மாகி எதிர்வரும் 30ஆம் திகதி வரை யாழ் மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றுவருகிறது.

குறித்த மருத்துவ முகாமில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து குறித்த தேவைப்பாடுகள் உடையோரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பங்குபற்ற விரும்பும் பயனாளிகள் தமது பதிவுகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் அறிவித்துள்ளார். (4-6-281)



முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுனர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகமும் வேல்விஷன் லங்கா நிறுவன ஒருங்கிணைப்பிலும் RPL முறைமை மூலம் பயிலுனர்களுக்கான கட்டட துறை மேசன், தச்சன், நீர்க்குழாய் பொருத்துனர், மின்னியல், மின் ஒட்டுனர்துறைகளுக்கான பரீட்சைகள் நடை பெற்று அவர்களுக்கான NVQ தர சான்றிதழ்கள் கடந்த 16 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன. (படம்: தவசீலன்)



மன்னார் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று சனிக்கிழமை காலை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. (படம்: ஜோசப்நயன்)



கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் சுய பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்ட பெண்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபட்ட பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (படம்-சப்தசங்கரி - தேவானந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. |
| கத்தரிக்காய் | 180 | 150 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 250 | 330 | 320 |
| தக்காளி | 160 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 240 | 240 | 280 | 300 |
| பூசணி | 70 | 80 | 100 | 80 |
| புடோல் | 250 | 180 | 180 | 140 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 100-250 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 350 | 350 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 | 160 |
| பீற்றூட் | 180 | 160 | 150 | 150 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1000 | 1600 |
| போஞ்சி | 200 | 220 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 140 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-90 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 180 | 140 | 140 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

# மணல் அகழ்வு இருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அக்கராயன் காட்டுப் பகுதியில் நேற்று சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் மணல் அகழ்விற்கு பயன்படுத்திய இரண்டு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் அத்தியட்சகர் [illegible] தெரிவித்தார். (4-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் யுவதி...

மொன்றில் பணியாற்றும் 19 வயது யுவதி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## 400 கிராம்...

பால்மாவின் புதிய விலை 790 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதன்படி மார்ச் 19ஆம் திகதி முதல் குறித்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வரும்.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிப்பு குறித்து நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## நயினாதீவு...

தலைவர் வணக்கத்திற்குரிய கங்துனே அஸ்ஸஜி மகாநாயக்க தேரர் மற்றும் நயினாதீவு பீடாதிபதி வணக்கத்திற்குரிய நவதகலபது மகித்தி திஸ்ஸ தேரரை சந்தித்தார்.

புனித பூமி பணிப்பாளர் ருச்சிர விதான புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவிடம் சன்னாஸ் பத்திரத்தை வழங்கி வைத்தார், அதன்பின்னர் செயலாளர் சன்னாஸ் பத்திரத்தை வாசித்தார்.

சன்னாஸ் பத்திரம் பேராசிரியர் கபில குணவர்தனவினால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் பிரதமர் ஸ்ரீலங்கா அமரபுர மகா நிக்காயாவின் அம்பகஹபிட்டிய பிரிவின் பிரதம சங்க தலைவர், நயினாதீவு ரஜமஹா விகாரை விகாராதிபதி வண. நவதகல பதுமகித்தி திஸ்ஸநாயக்க தேரருக்கு வழங்கினார். (ம)

## ஹோட்டல்களில்...

விலைகளும் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

அதற்கமைய 400 கிராம் பால்மா பக்கெட்டின் விலை 250 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பால்மா விலை அதிகரித்துள்ளமையால் இனி ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் பால் தேநீர் விற்கப்படமாட்டாது என்று சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர் சங்கத்தின் இணைப்பாளர் அசேல சம்பத் அறிவித்துள்ளார். (ம)

## அதிகளவான...

தால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே நேற்று முற்பகல் வீட்டில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

"இளைஞர், போதைப்பொருளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக அடிமையாக இருந்து வந்துள்ளார். அதனால் வீட்டில் பணம் கேட்பது மற்றும் திருட்டுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். அவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்ப பெற்றோர் முயற்சித்துள்ளனர்.

நேற்றுக் காலையில் ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டு விட்டு வீட்டுக்கு வந்த இளைஞர் நெஞ்சைப் பொத்தியவாறு நிலத்தில் சரிந்து உயிரிழந்துள்ளார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞரின் உயிரிழப்பு அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையினால் ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மரண விசாரணைகளை முன்னெடுத்தார்.

போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட தெல்லிப்பழை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தார். இந்த நிலையில் 2 வாரங்களில் மற்றொரு இளைஞனும்அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக் கொண்டதனால் உயிரிழந்துள்ளார். (ம-18,33,104)

## வரிசையில் காத்...

ணெய் வாங்குவதற்காக 5 மணிநேரம் வரிசையில் வெயிலில் காத்திருந்த முதியவர் ஒருவர் மயங்கி சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மயங்கி வீழ்ந்தவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

வத்தேகம, உடதலவின்ன பகுதியை சேர்ந்த 71 வயதுடைய முதியவரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ம)

## முல்லை சிறுமி...

காணாமல்போன நிலையில் அவர்களை தேடும் நடவடிக்கையில் பெற்றோர்கள், கிராமத்தவர்கள், பொலிஸார் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இருவரும் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் மீட்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் முகநூல் ஊடாக மட்டக்களப்பு செங்கலடி பகுதி இளைஞர் ஒருவருடன் காதல் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார்.

அந்த இளைஞன் சிறுமியினை மட்டக்களப்பு வருமாறு அழைத்துள்ளதை தொடர்ந்து சிறுமி தனது நண்பியுடன் வீட்டிற்கு தெரியாமல் மிதிவண்டியில் மாலை நேர கல்விக்கு செல்வதாக சொல்லிவிட்டு மிதிவண்டியினை பற்றைக்காட்டிற்குள் போட்டுவிட்டு பேருந்தில் ஏறி மட்டக்களப்பு செங்கலடிக்கு சென்றுள்ளார்கள்.

செங்கலடி இளைஞன் இருவரையும் காரில் ஏற்றிச்சென்று, தான் பேசிய சிறுமியுடன் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளதை தொடர்ந்து, அவர்களை வீடுசெல்ல அழைத்துக்கொண்டுவந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பேருந்தில் ஏற்றிவிட்டுள்ளான்.

இரண்டு சிறுமிகளும் யாழ்ப்பாணம் சென்று யாழ். நகரப்பகுதியில் சுற்றிதிரிந்த வேளையில் கடை ஒன்றில் பொருட்களை வாங்கியபோது நள்ளிரவாகியுள்ளது.

இரண்டு சிறுமிகளுக்கும் உதவிசெய்வதாக கூறி இரண்டு இளைஞர்கள் சிறுமிகளை அழைத்துக்கொண்டுசென்று வீடு ஒன்றில் தங்கவைத்து மற்றைய சிறுமியுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளர்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு பேருந்தில் இரண்டு சிறுமிகளும் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளதுடன் இரண்டு சிறுமிகளும் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வந்திறங்கியுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பில் இரண்டு சிறுமிகளின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதைதொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இருவரிடத்திலும் பெறப்பட்ட வாக்குமூலத்தினை தொடர்ந்து இரண்டு சிறுமிகளும் மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் சிறுமிகள் இருவருடனும் பாலியல் துஷ்பிரயோகத்தினை மேற்கொண்டவர்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றார்கள்.(ம)

## பிரத...

மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், பல்கலை மாணவர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளனர். (ம-18,33,101)

## தனங்கிளப்பில்...

லேயே பலியாகியுள்ளார்.

தனங்கிளப்பு சந்திக்கு அருகாமையில் உள்ள கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய நபரை வீதியால் பயணித்த கார் மோதியதில் இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது. இதில் கேரதீவு வீதி தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்த 61 வயதான தம்பிமுத்து குணசேகரம் என்பவரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.(ம-30)

## அர்ப்பணிப்புடன்...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர், நயினாதீவு ரஜமஹா விகாரையில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

அங்கு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரை என்பது புத்தரின் வருகையால் புனிதமடைந்த இடமாகும். சூலோதர மஹோதர மாமாவுக்கும் மருமகனுக்கும் இடையே எழுந்த இரத்தினக் கல் கதிரைக்காக நடந்த போரை நிறுத்துவதற்காக புத்தபெருமான் இந்த புனித இடத்திற்கு வந்ததாக சாசன வரலாறு கூறுகிறது என்றார். (ம)


தன நிதானய
திகதி - 2022.03.19
சீட்டிழுப்பு இலக்கம் - 741
E 44 48 50 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 4711
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
D 0 9 1 9 5 4

மெகா பவர்
திகதி 19/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1059
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
O 12 09 20 72 75

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1225
வெற்றி இலக்கங்கள்
கடகம் 9 1 4 6 2 4
தேசிய லொத்தர் சபை

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-03-19
வெற்றி வாரம் : 495 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,596,184/-
Z 08 53 50 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.16,996,084/-
உறுதியாக சுப்பர் பரிசுத்தொகை ரூ.10,000,000/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 12 13 39 54 58
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 864
வர்ணம் சிவப்பு
திகதி 2022.03.19 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 223,598,323/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.19
சீட்டிழுப்பு இல : 3849
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,194,640/-
சனிதா
வெற்றி இலக்கங்கள்
12 30 44 55 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,626,011/-
திகதி 19.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3400
வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் 06 32 35 45 மேஷம்
2 2 5 9 8 5 2
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,113,600/-

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1514
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,715,280/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்
33 34 68 77 O
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1688
நிறம் நீலம்
சீட்டிழுப்புத் திகதி 19.03.2022
தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
J 04 07 14 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 53,368,700/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DTPE Campus

**Diploma in Sinhala**

சிங்களம் எழுத, வாசிக்க, கதைக்க சிங்கள டிப்ளோமா கற்கைநெறி

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

கால எல்லை 6 மாதங்கள்

நேரம் : வார இறுதி நாட்கள் (காலை, மாலை வகுப்புக்கள்)

**விசேட விலைக்கழிவில் 15,000/=**

தவணைகளில் செலுத்தும் வசதி

விண்ணப்ப முடிவுத் திகதி : 27.03.2022

(10662)

N0.925, KKS Road,
Thadatheru Junction, Jaffna.

**021 468 0964**
**077 543 8086**

## காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் கந்தரோடை வீதியில், ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு முன்பாக College Road இல் 6 பரப்பு காணி 11 அடி தனிப் பாதையுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. உறுதி, 25 வருடத்திற்கு முற்பட்ட தோம்பு, சோலை வரி உட்பட அனைத்து ஆவணங்களுடன். தரகர்கள் தேவையில்லை. விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

(10668)

ரூபன் : 077 198 0768
செல்வன் : 077 230 6642, 071 520 6642

உரிமையாளர் :
திரு.சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன் JP(whole Island)
**இல.242, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.**

## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு

- பெண் பராமரிப்பாளர்
- உளவளத் துணையாளர்
- களஞ்சிய காப்பாளர்
- முகாமையாளர் (ஆண்)

**உடன் தொடர்புகொள்ளவும்!!!!!**

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(10689)

**071 535 4500**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, $A_1$ UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

$A_1$ uk Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(10628, 10244)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

யாழ்.கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.**

- கைதடி சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரம்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் (ஏ9 வீதி ) அருகாமை வீதியில்

(10694)

**074 291 3725, 074 291 3726**

## காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் (யாழ். - காரைநகர் வீதி) அரசடி பிள்ளையார் கோவில் முன்பாக 9 பரப்பு காணி 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- **மானிப்பாய் சந்தையில் இருந்து 1 Km தூரத்தில்**
- **14 அடி பாதையுடன்**
- **பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில்**
- **1 பரப்பின் விலை 5 இலட்சம் ரூபாய்**

(10694)

தொடர்புகளுக்கு

**074 291 3727**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



(C-4022)

**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

எமது கிளைகள்

• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.



(C-4021)

அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்

சம்பளம் **20'000/-**

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். **0777-068-777**

## Personal Classes

தரம் 9 முதல் 11 வரையான மாணவர்களுக்கு தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழி மூலமான கணிதபாட மற்றும் A/L மாணவர்களுக்கான ICT தனியார் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

(C-3984)

**M.ROSAN B.Sc(IT)**

**076 637 0388**

## விற்பனைக்கு

- Jack முட்டு (இரும்பு)
- Concrete mixer

தொடர்பு

(10703)

**076 021 5858**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 336
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2053 | 20.03.2022 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புபடுத்தப்பட்டு மிக நீண்ட காலம் சிறையில் அடைபட்டிருந்த பேரறிவாளனுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது.

பேரறிவாளனின் விடுதலையில் அவரின் தாயார் அற்புதம்மாளின் தொடர் போராட்டம்-அவரின் துணிச்சல் பாராட்டுக்குரியது.

உண்மையில தனது மகனின் விடுதலையில அற்புதம்மாள் நடத்திய தியாக வேள்வி வெற்றி பெற்றிருக்குது. அந்த அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்கான சாதனைப் பெண்ணாக அற்புதம்மாளை சர்வதேச சமூகம் அங்கீகரித்து அறிவிக்க வேணும் எண்டொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம்.

(இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது).

மேற்படி தீர்மானத்தைத் தொடர்ந்து ஆலடியில அமைதி நிலவியது. அந்த அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** காணாமல் போன உறவுகளுக்காக எங்கட உறவுகள் எவ்வளவு காலமாகப் போராடுகினம். அவர்கள் விடுகின்ற கண்ணீருக்கு ஓர் எல்லை இருக்குதோ?

**பண்டிதர்:** இஞ்சே விதானையார்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை

எண்டு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இப்ப பாத்தியள்தானே! எங்கட பெற்றோர் ஆற்றாது அழுத கண்ணீர் இலங்கையின்ர செல்வத்தைத் தேய்த்துப் போட்டுதுதானே.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். பௌத்த சிங்களவர்களின் தலைவராக இருக்கக் கூடியவர் கோட்டாபய ராஜபக்‌ஷ எண்டு சொல்லி, அவரை ஜனாதிபதியாக்கின பௌத்த சிங்கள மக்கள் இப்ப ஜனாதிபதிக்கு எதிராகக் கோஷம் செய்யினம்.

**மூப்பர்:** அதோட கங்காணியார்; ராஜபக்‌ஷ தரப்பின்ர முகத்தில 'ஈ' ஆடல்லக் கண்டியளோ.

**சாத்திரியார்:** இது தான் இறைவன்ர தீர்ப்பு. ஆட்சிக்கு வந்தால் இனி எங்கள ஒருத்தராலும் எதுவும் செய்ய முடியாது எண்டு நினைத்த ராஜபக்‌ஷ குடும்பம், இப்ப ஏன்? வந்தம். ஏன்? வெண்டம் எண்டு நினைக்கிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது.

**சிறாப்பர்:** ஆனால், இன்னும் அவையின்ர தடிப்புக் குறைஞ்சபாடில்லைத்தானே.

**பண்டிதர்:** சிறாப்பர், அறுபது நாளைக்கு எழுபது கந்தை எண்டொரு பழமொழி எங்கட தமிழ் மொழியில இருக்குது. உண்மையில இதின்ர பொருள் அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை.

அப்ப, ஒருத்தர் தலையால அழிகிறதாக இருந்தால், தன்பாட்டில அகந்தை எழும்.

**வாத்தியார்:** அகந்தை மட்டுமல்ல, அநியாயம் செய்கிறவியளும் அழியத்தான் செய்வினம்.

**விதானையார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** வட பகுதியில இருக்கிற சில காப்புறுதி நிறுவனங்கள் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கினம். அந்த அநியாயத்தைத் [illegible] வாத்தியார் சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:** யாழ்ப்பாணத்தில இயங்குகிற நிறுவனமொன்று ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தில காப்புறுதி செய்திருக்குது. 15 வருடத்திற்கு மேலாக அந்தக் காப்புறுதி தொடர்ந்திருக்குது.



## ஸ்ரீலங்கா இன்சூரன்ஸுக்கு எதிராக சட்ட நடவடிக்கையாம்!

எனினும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில பெய்த பெரு மழை வெள்ளத்தில குறித்த நிறுவனத்திற்குப் பெரும் சேதம்.

எனினும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அந்தக் காப்புறுதி உடன்படிக்கை காலாவதியாகிவிட்டுது.

இருந்தும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் குறித்த நிறுவனத்திற்குக் காப்புறுதிக் காலம் முடிவுற்றதென்பதை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில, காப்புறுதியைப் புதுப்பிக்கின்ற போது, முதிர்வு காலத்தில் இருந்து தான் காப்புறுதிக்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்குது.

**விதானையார்:** பிறகென்ன, முதிர்வு காலத்திகதியில இருந்து காப்புறுதிக் கட்டணத்தை வசூல் செய்தால், ஏற்பட்ட அந்த இழப்புக்குரிய நட்டஈட்டை சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் நிறுவனம் செலுத்தத் தானே வேணும்.

**வாத்தியார்:** அது தான் நடக்கல்ல விதானையார்.

யாழ்ப்பாணத்தில இருந்தும் கொழும்பில இருந்தும் வந்த இன்சூரன்ஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் எல்லாரும் வெள்ளத்தால நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பீடு செய்தினம்.

ஆனால் இழப்பீட்டுத் தொகையை வழங்கவில்லை. அது தொடர்பில அப்பீல் செய்தும் இழப்பீடு வழங்க முடியாதெண்டு கொழும்புத் தலைமையகம் அறிவிச்சிருக்குதாம்.

**சிறாப்பர்:** அப்ப வாத்தியார் வழக்கு வைக்கலாமே.

**வாத்தியார்:** அது தான் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கிற வேலையில பாதிக்கப்பட்ட நிறுவனம் இறங்கியிருக்கிறதாகக் கேள்விப்பட்டன்.

**சாத்திரியார்:** நானும் அறிஞ்சனான். வட பகுதியில இருக்கிற சில இன்சூரன்ஸ் நிறுவனங்கள் தமிழ் மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றுகின்றன எண்டும் இயற்கை அனர்த்தம் ஏற்படக் கூடிய காலத்தில காப்புறுதி ஒப்பந்தம் காலாவதியானால்; அதுபற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்த மாட்டினம் எண்டும்.

**வாத்தியார்:** சரி எதுக்கும் சட்ட நடவடிக்கை எடுத்தால் திருத்தம் வரும்தானே!

இவ்வாறு பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாடு நாசம்" அதிரும் கோஷம்!



> ராஜபக்ஷர்களை தமக்கு சுதந்திரம் தந்த மீப்பர்கள் எனவும் கதாநாயர்கள் எனவும் போற்றிப் புகழ்ந்த பெரும்பான்மை சிங்களவர்கள் இன்று அவர்களுக்கெதிராய் கோஷமிடத் தொடங்கி விட்டனர்

"வாழ்க்கை ஒரு வட்டம்டா, இங்க ஜெயிக்கிறவன் தோற்பான், தோற்கிறவன் ஜெயிப்பான்" இது தளபதி விஜய் ஒரு திரைப்படத்தில் பேசும் வசனம்.

என்னதான் சினிமா வசனமாக இருந்தாலும் அந்த வசனம் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானது.

அதிலும் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இந்த வசனம் மிகவும் பொருந்தும் என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், நாட்டில் புரையோடிக்கிடந்த பயங்கரவாதத்தை அழித்து விட்டதாய் மார்தட்டி தமிழினத்தை சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்திய ஆட்சியாளர்களை பெரும்பான்மையினர் மீட்பராய் கருதினர்.

ராஜபக்ஷர்கள் இல்லாவிட்டால் நாம் யாழ். மண்ணை மிதித்திருக்க முடியுமா? எமக்கும்எமது நாட்டிற்கும் விடிவு தந்தவர்கள் ராஜபக்ஷர்கள் என்று தமது நெஞ்சில் அவர்களின் பெயரை பச்சை குத்தி வைத்திருந்தனர்.

ஒரு இனத்தை அழித்து பெற்ற வெற்றியை வெற்றி விழாவாய்க் கொண்டாடி, அடிபட்ட இனத்தின் மனக்காயத்தில் ஆணி அடிக்கும் வலியைக் கொடுத்தவர்கள் இந்த ஆட்சியாளர்கள் என்றால் அதை மறுத்து விட முடியாது.

தமிழினத்தின் மனங்களை கீறிக் கிழித்து உப்பிட்டாலும் சிங்களவர் மனங்களில் ராஜபக்ஷர்கள் கதாநாயகர்களாகவே வாழ்ந்தனர்.

ஆனால் இன்றைய நிலையில் சிங்கள மக்களின் மனங்களில் தற்போதைய ஆட்சியாளர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழ் இனம் இன்னல்களை அனுபவித்த இனம். அந்த இனம் இறப்பின் விளிம்பு வரை சென்று வந்த இனம்.

இழப்பதற்கு இனி எதுவும் இல்லை என்ற நிலைக்குச் சென்ற இனம்.

இந்த உலகில் இனி எந்தளவு துன்பம் வந்தாலும் தமிழினம் முள்ளிவாய்க்காலில் பட்ட துன்பத்தில் கால்வாசியாகக் கூட அது இருக்காது. அதனால் துன்பம் என்பதற்கு தமிழினம் பழக்கப்பட்டு விட்டது.

ஆனால் பெரும்பான்மை சிங்களவர்கள் அவ்வாறில்லை.

அவர்களுக்கு வெடிச்சத்தம் கேட்டு பழக்கம் இல்லை.

விமானம் குண்டு மழை பொழிய பங்கருக்குள் பதுங்கிய அனுபவம் இல்லை.

குண்டடிபட்டு இறந்த, கூட வந்த தன் உறவுகளை புதைக்கக் கூட கணம் இன்றி கடந்து வந்த ரணம் அவர்கள் கேள்விப்படாத ஒன்று.

பொருள் விலையேற்றத்திற்கு பழக்கப்பட்டு பவுண் விற்று சோறு தின்னத் தெரியாதவர்கள்.

இன்று உழைத்து, இன்று உண்டு, இன்று மகிழ்வாய் இருந்தால் அதுவே அவர்களின் சொர்க்கம்.

ஆனால் இன்று இந்த நாட் டில் அந்த நிலை இருக்கிறதா? எனில் பதில் எவ்வாறாக இருக்கும் என்பதை கடந்த செவ்வாய்க்கிழமையன்று காட்டியிருந்தது பெரும்பான்மை சிங்கள இனம்.

இலங்கையின் வரலாற்றில் என்றும் இல்லாத பொருளாதாரச் சிக்கலை எதிர்நோக்கியிருக்கிறது இந்த நாடு.

ஒன்று இரண்டு எனின் எழுதி விடலாம். ஆனால் பட்டியலிட முடியாத அளவில் பொருட்கள் அனைத்தும் விலை ஏறி விட்டன.

விலை ஏற்றம் என்றால் சர்வ சாதாரணமான விலையேற்றம்அல்ல.

இதற்கு கொஞ்சமும் பழக்கப்படாத சிங்கள மக்கள் தங்கள் கதாநாயகர்களைத் தூக்கி எறிய முனைந்து விட்டனர் என்பது தான் மறுக்க முடியாத உண்மை.

"நாடு நாசம் நாட்டைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில் கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக பாரிய போராட்டம்ஒன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மக்கள் அலை அலையாய் வீதிக்கு வந்து ஆட்சியாளர்களுக்கு எதிராக கோஷமிட்டனர் எனின் இந்த ஆட்சி மீது பெரும்பான்மை சிங்கள மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என்பது புலனாகிறது.

அதிலும் யாரை தங்கள் மீட்பராய் கருதினரோ அவர்களை வீட்டுக்குச் செல்லுங்கள் என கோஷமிட்டது சர்வசாதாரணமான விடயமல்ல.

அத்தியாவசிய உணவான பாணை தடியில் குத்தி அதை தீமூட்டி எரித்தபடி ஆட்சியாளர்களுக்கெதிராக கொதித்தெழுந்த மக்களை பொலிஸாரினால் அடக்க முடியவில்லை.

கொழும்பின் பல வீதிகளிலிருந்து பெரும் தொகையான மக்கள் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டதுடன் பிரேதப் பெட்டியை ஊர்வலமாய் எடுத்து வந்து அதை ஜனாதிபதி செயலகத்திற்குள் போட முயன்றமை அவர்களின் மனக்குமுறலை மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

தமிழ் மக்கள் தமக்கான அநீதியை எதிர்த்து வெடித்தெழுந்த போதெல்லாம் பயங்கரவாதம் என்ற ஒற்றைச் சொல்லை வைத்து அடக்கும் ஆட்சியாளர்கள் சிங்கள மக்களின் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இது இவ்வாறிருக்கையில், கடந்த புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தியிருந்தார்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் வேளையில் ஜனாதிபதியின் விசேட உரையினை மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

அதிலும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக் குறைப்பு ஏதும் இருக்கும் என நம்பியிருக்க அவரின் உரையில் அவ்வாறான விடயம் எதுவும் இடம்பெறவில்லை.

ஊடகங்கள் புஸ்வாணமான உரை என விமர்சித்திருந்தன.

குறித்த உரை முகப்புத்தகத்தில் நேரடியாக ஒளிபரப்பட்டிருந்தது. முகப்புத்தகத்தில் ஜனாதிபதியின் உரைக்கு சிரிப்பு முகத்தை 20 ஆயிரம் பேரும் கோப முகத்தை மூவாயிரம் பேரும் விருப்பக் குறியீட்டை இரண்டாயிரம் பேரும் செலுத்தியிருந்தனர்.

வழமையாக ஜனாதிபதியின் உரைக்கு இவ்வாறான எதிர்மறை விடயங்கள் நடைபெற்றிருக்கவில்லை எனின் தற்போதைய ஆட்சியாளர்கள் மீது சிங்கள மக்கள் எதிர்மறைச் சிந்தனை கொண்டுள்ளனர் என்பது திண்ணம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்கு எதிரான அந்த மக்கள் சமுத்திரத்தில் நின்று இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் வரை நான் ஓய மாட்டேன் என சூளுரைத்திருந்தார்.

எது எப்படியோ வாழ்க்கை ஒரு வட்டம் இங்கு ஜெயிப்பவன் தோற்பான், தோற்பவன் ஜெயிப்பான் என்ற சினிமா வசனம் இவர்களுக்கு மிகப் பொருத்தமாய் அமைகிறது.

**இந்திரபுத்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்




ஓடிடியில் வெளியாகும் சில படங்களைப் பார்க்கும் போது ஒன்றே ஒன்று எழுதத் தோன்றுகிறது. படத்தை எடுத்தவர்களே, இந்தப் படங்கள் எல்லாம் தியேட்டர்களில் வெளிவந்தால் யாரும் சீண்டக் கூட மாட்டார்கள் என, ஓடிடி பக்கம் வந்த விலைக்கு விற்று விடுகிறார்கள் போலிருக்கிறது.

புதிய படம் வருகிறது, அதுவும் முன்னணி நடிகர் நடித்த படம் வருகிறது என்று படம் பார்க்க ஆர்வத்துடன் உட்காரும் சராசரி ரசிகர்கள் தான் இம்மாதிரியான படங்களைப் பார்த்து ஏமாற்றத்திற்கு ஆளாகிறார்கள். அப்படியான ஒரு படம்தான் இந்த "மாறன்".

"துருவங்கள் பதினாறு" என்ற வித்தியாசமான படத்தைக் கொடுத்த கார்த்திக் நரேன் தான் இந்தப் படத்தை இயக்கினாரா? என்பது ஆச்சரியமாக உள்ளது. "அசுரன்" போன்ற முன்னோடியான படங்களில் நடித்து தேசிய விருது வாங்கிய தனுஷ், இந்த மாதிரியான படங்களில் நடிக்க எப்படி நடிக்க சம்மதித்தார் என்பதும் அதிர்ச்சியாக உள்ளது.

"இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸ்ட்" ஆக இருப்பவர் தனுஷ். நடைபெற உள்ள இடைத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் சமுத்திரக்கனி, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் செய்யத் திட்டமிடும் தில்லு முல்லுகளை அம்பலப்படுத்துகிறார். இந்நிலையில் தனுஷின் தங்கை ஸ்ம்ருதி வெங்கட்டை யாரோ கடத்தி கொலை செய்துவிடுகிறார்கள். சமுத்திரக்கனி தான் கடத்தி கொலை செய்திருப்பார் என சந்தேகப்படும் தனுஷ் அது பற்றி விசாரிக்க ஆரம்பிக்கிறார். அவர் உண்மையைக் கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பது தான் படத்தின் மீதிக் கதை.

தமிழ் சினிமாவில் இதுபோன்ற பல கதைகளை இதற்கு முன் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்தப் படத்தைப் போல இப்படி ஒரு முதிர்ச்சியில்லாத ஒரு படத்தைப் பார்த்திருக்க மாட்டோம். "என்ன ஆச்சு கார்த்திக் நரேன் ?".

இந்தப் படத்திற்கும், இந்தக் கதாபாத்திரத்திற்கும் இவ்வளவு நடிப்பு போதும் என தனுஷ், ஏதோ கடமைக்கு நடித்துக் கொடுத்து முடித்து விட்டார். அவருக்கே இவ்வளவுதான் இன்ட்ரஸ்ட் என்னும் போது, நாம் இன்னும் என்ன சொல்வது?

"மாஸ்டர்" படத்திலேயே எதற்காக இவர் என கேட்க வைத்தவர் மாளவிகா மோகனன். இந்தப் படத்திலும் பெயருக்கு ஒரு கதாநாயகி என வந்து போகிறார். ஒரு காதல் காட்சி இல்லை. ஒரு டூயட் இல்லை. மாளவிகாவின் இன்ஸ்டாகிராம் போட்டோக்களுக்கு மட்டும் நாம் ரசிகர்களாக இருப்போம் என ரசிகர்கள் நினைக்கப் போகிறார்கள்.

தமிழ் சினிமாவில் ஒரு தங்கை கதாபாத்திரம் என்னவெல்லாம் செய்யுமோ அனைத்தையும் செய்கிறார் ஸ்ம்ருதி வெங்கட். தனுஷ் வீட்டின் முன் 20 வருடங்களுக்கும் மேலாக இஸ்திரி கடை வைத்திருப்பவராக மாமா ஆடுகளம் நரேன். கௌதம் மேனனை வெறுப்பேற்ற நினைத்து, அவர் நடிப்பதைப் போல, அவர் ஆங்கிலம் கலந்து பேசுவதைப் போல ஒரு இன்ஸ்பெக்டர் கதாபாத்திரத்தை வைத்திருக்கிறார் கார்த்திக் நரேன்.

முன்னாள் அமைச்சராக வில்லன் கதாபாத்திரத்தில் சமுத்திரக்கனி. இன்னும் எத்தனை படங்களில் இப்படி ஒரு கதாபாத்திரம் வரப் போகிறதோ. ஆளை விடுங்க சாமி என்றே சொல்ல வைக்கிறது. படத்தில் ஒரு டிவிஸ்ட் வேண்டுமே, அதற்காக இயக்குநர் அமீரை ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வைத்திருக்கிறார்கள்.

ஜிவி பிரகாஷ்குமார் இசையில் சொல்வதற்கு ஒன்றுமில்லை. தனுஷ் எழுதி பாட ஒரு பாடலை வைக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.

நேரம் போவதற்கு சினிமா பார்ப்போம் என்பார்கள், இந்தப் படத்தைப் பார்த்தால் நேரம் போகுமா என்பதும் சந்தேகம்தான்.

மாறன், மதிமாறன் நல்லவேளை அவர்களே தெரிந்து "மதி"யை எடுத்து விட்டார்கள்.




## ஜாலியோ ஜிம்கானா..
## வைரலாகும் விஜயின் குரல்

பீஸ்ட் படத்தில் நடிகர் விஜய் பாடியுள்ள பாடல் நேற்று வெளியாகியது.

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திர நடிகரில் ஒருவராக திகழும் விஜய் "மாஸ்டர்" திரைப்படத்திற்கு பிறகு நடித்துள்ள திரைப்படம் "பீஸ்ட்". இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இந்த திரைப்படத்தை இயக்கி உள்ளார். இந்த திரைப்படத்தில் நடிகை பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்துள்ளார். இயக்குநர் செல்வராகவன் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்த திரைப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். காதல், நகைச்சுவை மற்றும் அதிரடி சண்டைக் காட்சிகளுடன் தயாராகி உள்ள "பீஸ்ட்" திரைப்படத்திற்கு மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

சமீபத்தில் "பீஸ்ட்" திரைப் படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்று போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தொடங்கின. "பீஸ்ட்" திரைப்படம் வரும் ஏப்ரல் மாதம் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பீஸ்ட் படத்தில் நடிகர் விஜய் பாடியுள்ள பாடலான "ஜாலியோ ஜிம்கானா" நேற்று வெளியிடப்பட்டது.

விஜய் குரலில் வெளியான இந்த பாடல் ரசிகர்களிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீஸ்ட் திரைப்படத்தில் ஏற்கனவே முதல் பாடலாக "அரபிக் குத்து" வெளியான நிலையில் தற்போது இரண்டாம் பாடலாக "ஜாலியோ ஜிம்கானா" வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியின் போராட்டம் எப்படிப்பட்டது வியாசரே?

**பேரின்பம் — உசன்**

**அன்பு வியாசரே நீங்கள் வேலை செய்வது சம்பளத்திற்காகவா?பொது நலனுக்காகவா?**

மழை பெய்வது பொது நலன். அதில் குடை பிடிப்பது சுயநலன்.இதைப் புரிந்து கொள்ளாதவரை நாம் வாழ்வில் முன்னேறிவிட முடியாது.

பொது நலனுக்காக மழை பெய்கிறதே என்பதற்காக அதில் நனைந்து விட முடியாது. அப்படி நனைந்துவிட்டால் அதன் விளைவு வேறாகவே இருக்கும்.

சுய நலனுக்காக குடை பிடிக்கிறோம் என்பதற்காக மற்றவர் நமக்கு குடை பிடிக்க வேண்டும் என்பது சுயநலத்திலும் மிக மோசமானது.வாழ்வதற்கு பணம் வேண்டும். அது சுயநலம். செய்யும் பணியை மக்கள் நலன் சார்ந்து செய்வது பொது நலன்.

**தவீத் — வடமராட்சி**

**நாடு கேடு கெட்டுப் போய்க்கொண்டிருக்கும் வேளையிலும் புத்தபிரான் புதுப் புது இடங்களில் எல்லாம் குடிகொள்கிறாரே வியாசரே?**

என்ன செய்வது அவர்களுக்கு கனவிலும் பௌத்தத்தை பரப்பும் சிந்தனை தான்.

பெற்றோலுக்கும் மண்ணெண்ணெய்க்கும் டீசலுக்கும் பொதுமக்கள் வரிசையில் நின்று அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சமையல் எரிவாயு இல்லாமல் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இவர்கள் இப்படி மனிதாபிமானமற்றுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்களே.

ஒரு திரைப்படத்தில் வடிவேலு சொல்லும் வசனம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

"இந்த ரணகணத்திலும் உனக்கு கிளுகிளுப்பு கேட்குதா"

ஐயோ ஐயோ..!

**தருஷ் — வதிரி**

**வெளிநாட்டு பழங்களுக்கு இறக்குமதி வரியை அதிகரித்துவிட்டார்களே.இனி என்ன ஆகப் போகிறது நம் நிலை?**

ஏன் வெளிநாட்டுப் பழங்களில் தான் சத்து இருக்கிறதா? ஒரு அப்பிளில் இருக்கும் சத்தின் பல மடங்கு ஒரு கொய்யாப் பழத்தில் இருக்கிறது.

இப்படி ஒவ்வொரு பழத்திற்கும் ஒவ்வொரு விசேட குணம் இருக்கிறது.

அவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

வெளிநாட்டுப் பழங்கள் பழுதடையாமல் இருக்க எவ்வளவு மரந்துகள் ஏற்றப்படுகின்றன என்பது தெரியுமா? அதிலும் விலையோ மிகமிக அதிகம்.

அதைவிட விலையில் குறைந்த ஆரோக்கியம் நிறைந்த எமது நாட்டில் விளைந்த நஞ்சற்ற பழங்களை வாங்கி உண்டு ஆரோக்கியமாக வாழலாமே.

கொய்யாப்பழம் சாப்பிடுவது நாகரிகம் அற்றது என்ற நினைப்பை உதறி எறியாத வரை எமக்கு மீட்சியில்லை.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் — மீசாலை**

**இந்த நாட்டில் பொதுமக்களின் பொருளாதாரம் எப்படியாக இருக்கப் போகிறது வியாசரே?**

அரிசி ஒரு கிலோ 500 ரூபா, மரக்கறி ஒரு கிலோ 1000 ரூபா, பருப்பு ஒரு கிலோ 1500 ரூபா, தேங்காய் ஒன்று 300 ரூபா, பெற்றோல் ஒரு லீற்றர் 500 ரூபா இப்படி மாற்றமுறும் காலம் வெகு தொலைவில் இல்லைத் தம்பி.

மனிதர்கள் வாழ முடியாத நாடாக இலங்கை மாற்றிவிட வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. இந்தப் பெருமைக்குரியவர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்கள் மாத்திரமே.தமிழ் மக்களுடன் யார் கூட்டுச் சேர்ந்தாலும் அவர்களைப் புலிகளாக சித்திரித்து எதிர்மறைக் கருத்தினூடே ஆட்சியமைத்ததன் விளைவு இப்போது தெரிகிறதல்லவா. இது ஆரம்பம் மாத்திரமே, முடிவு எங்கேயோ? கடவுளுக்கே வெளிச்சம்.

**ராஜ் — மீசாலை**


**அரசுக்கு எதிரான எதிர்க்கட்சியின் போராட்டம் எப்படிப்பட்டது வியாசரே?**

இப்படியே போனால் சோமாலியாவிலும் மோசமான நாடாக இலங்கை மாறும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

கொழும்பில் நடைபெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பெரும்திரளான பொது மக்கள் ஒன்றுகூட அரசிற்கு எதிராக கோஷம் போட்டனர்.

அடடா இதே வாய்கள்தான் இவர்களை கதாநாயகர்கள் என்று போற்றிப் புகழ்ந்தன என்பதை நினைக்கும் போது சிரிப்புத்தான் வருகிறது.

நாம் இந்த ஆட்சியைக் கொண்டு வரவில்லையே. அதனால் அதைக் கொண்டு வந்தவர்கள் எதையும் செய்யட்டும். நாம் ஓரமாய் இருந்து வேடிக்கை பார்ப்போமே.



வெளிநாட்டு பழங்களுக்கு இறக்குமதி வரியை அதிகரித்துவிட்டார்களே.இனி என்ன ஆகப் போகிறது நம் நிலை?

**அருட்கதிர் — துன்னாலை**

**காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கூறாமல் இறப்புச் சான்றிதழும் பணமும் காணியும் தரப் போகிறார்களாமே?**

பத்து மாதம் சுமந்து, ஆயிரம் கனவுகளுடன் பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு இன்று வருவான், நாளை வருவான் என தினம் தினம் மனதிற்குள் வெதும்பி தவிக்கும் பெற்றோர்களின் மனநிலையைப் புரியாதவர்களிடம் பேசிப் பயன் என்ன? நெருப்பு சுட்டால் தான் தெரியும் அந்த வலி எப்படி இருக்கும் என்று.

இவர்களுக்கு சுடத்தான் தெரியுமே தவிர சூடு வாங்கி அதன் வலியை உணரத் தெரியாது. இவர்களிடத்தே நீதியைக் கேட்பது சாத்தானிடம் வரம் கேட்பதற்குச் சமம்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**என்னப்பா பொருளாளர் சீனாவை விட்டுட்டு இந்தியாவின்ர பக்கம் சாஞ்சிட்டாரோ?**

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கி நின்றான் இலங்கை வேந்தன் என்றான் கம்பன். இப்போதைய இலங்கையின் நிலையும் இதுவே.

சீனா எமது உற்ற தோழன். சீனா எங்களைக் கைவிடாது என்று ஆட்சியாளர்கள் எவ்வளவு பெரும் கதை பேசினர்.

ஆனால் இலங்கை இக்கட்டில் மாட்டியிருந்த போது இவர்களை சீனா கைவிரித்து விட்டது.

இந்தியா இறுகப்பற்றி விட்டது.நிபந்தனை பல விதித்திருக்கிறது.

இந்த நிபந்தனைகளில் தமிழரை நிம்மதியாய் வாழ விடுங்கள் என்ற வாக்குறுதியை வேண்ட வேண்டும்.

இல்லையேல் எமக்கு மீட்சியை இவர்கள் தரமாட்டார்கள்.

**தனராசா — உடுப்பிட்டி**

**ஐயா பெரியவரே! பணத்திற்காக உடலை விற்கும் நடிகைகள் தெய்வ பக்தி மிகுந்தவர்களாக நடிக்கிறார்களே?**

தற்போதைய சினிமா தொழில் முறை சினிமாவாக மாறிவிட்டது.அதனால் நீங்கள் சொல்வது போல் அடக்க ஒடுக்கம் என்று இருந்தால் அவர்களின் தொழில் முறை பாதித்துவிடும்.

அவர்கள் செய்யும் தொழில் வாங்கும் பணத்திற்கு விசுவாசம் காட்டுகிறார்கள்.

இவற்றை நாம் கணக்கில் எடுத்துவிட முடியாது.

நாம் ஒரு சிலர் அதை எதிர்ப்பதால் ஏதும் நடந்துவிடும் என்றாலும் பரவாயில்லை.

*இப்படி கத்துவதால் நமது வாய்தான் வலிக்கும்.* ஆதனால் பார்க்க முடிந்தால் பாருங்கள். இல்லையெனில் கண்களை மூடிவிடுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் கருதாது கடமையைச் செய்

எங்கள் வீட்டு முற்றத்திலே
பெரிய மாமரம் காய்த்தது
நாங்கள் விரும்பும் பலவினங்கள்
ஒட்டு மரமாய்த் தந்தது.

பலவித மாம்பழம் ருசித்தபின்
விதைகளைத் தாத்தா எடுத்துச் சென்று
தூரத் தூர நட்ட பின்
மெல்ல வீட்டிற்கு வந்து சேர்ந்தார்

தாத்தா நட்ட விதையெல்லாம்
நன்கே வளர்ந்து பழந்தர
தாத்தா உயிருடன் இருப்பாரோ
என்றே தம்பிமார் கதைத்தனர்

உங்கள் கைகளில் கிடைத்த பழம்
எந்தன் பாட்டன் நட்ட மரம்
இங்கே நாட்டிடும் விதை வளர்ந்து
உங்கள் வாழ்வையே மகிழ்விக்கும்

எந்தன் பாட்டன் மரம் நட்டு
நானும் நீங்களும் சுவைத்தது போல்
அந்நாள் பயனைக் கருதாமல்
நட்டதன் விளைவே இது என்றார்.

சி.சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.

## நீங்கா துயரம்



காலம் கடந்த கனவுகள் எல்லாம்
காரிருள் படையாய் நெஞ்சில் உறைய
ஈழத்தமிழர் காணும் வளர்ச்சியை
அழிக்கும் இளத்தவர் கனைகளை தொடுக்க

கல்வியில் சிறந்த என் இனம் இன்று
போதையில் நாட்டின் தூணாய் இருக்க
புகழினை கண்ட கண்கள் இக்கொடுமையைக்
கண்டு கலங்கியது இன்று

துயரம் கடந்து உயரம் தொடும் நொடி
விலைகள் உயர்ந்து விலங்காய் தெரியுது
மீனவர் வணங்கும் கடலில் கூட
அரசியல் செய்யும் புத்திகள் ஏனோ?

நீங்கா துயரம் நிலையாய் இருக்க
கவியாய் கூறி தீர்ப்பேன் தமிழா.

ந.விதுஷன்,
கற்கோவளம்.

## கடவுளுக்கு ஒரு கடிதம்

அப்பனே இறைவா அருந்தமிழ் அழகா எப்படி இருக்கிறாய் உங்கே
பட்டினியாலே சற்று முன் வரை சாகாமல் இருக்கிறோம் இங்கே
பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தாயாம் அன்று
பாணுக்குக் கூடப் பாலகர் படும் துயர் பார்த்துமா வரவில்லை இன்று
மாலுக்கும் அயனுக்கும் நள்ளிரா வேளையில்
ஒளியாகியே அருள் புரிந்தாய் நள்ளிரவில் விலை ஏறுமோ எப்பொருள்
எமக்கு நீ கூறிடு அறிந்தால் மாவுக்கும் சீனிக்கும் அரிசிக்கும் பருப்புக்கும்
நாலுக்கும் அலைகிறோம் தெருவில் சீவிக்கும் நிலையினை
முடித்துமே எங்களை அழைத்திடு உந்தனுக்கு அருகில்
எரிபொருள் எங்களின் மண்ணிலே இல்லையே வாகனம் ஓடாதே
அறிவாய் மறைபொருள் இறைவனே எங்களுந்தனின்
கைலாச வாகனம் தருவாய் பச்சை ஆடையைக் கட்டிய எங்களின்
தோட்டம் துரவுகள் பாராய் கச்சையும் இன்றியே காய்ந்திடும் நிலையினில்
இறைத்திட மண்ணெண்ணெய் தாராய் இல்லை என்பதே
இருக்குது எங்களின் நாட்டிலே என்ன நாம் செய்ய
தொல்லையை அகற்றிடும் ஐங்கரன் தந்தையே
வந்திடு நாமிங்கு உய்ய எரிவாயு இல்லையென ஏக்கத்துடன் இங்கு
வரிசையிலே நிற்போரை பாரையா திரிபுரம் எரித்தவனே வாயுவுடன்
நீ கதைத்து எரிவாயு பிரச்சினையைத் தீர்ய்யா மார்க்கண்டேயரின்
ஆயுளைப் பெருக்கிடக் காலனை காலாலே உதைத்தாய்
காலனும் எங்களின் காலடி வந்துளான் இன்று நீ எங்கே போய் ஒளித்தாய்
பஞ்சத்தைப் போக்கிடக் குரவர்கள் தமக்கு நீ
படிக்காசு அன்றைக்குக் கொடுத்தாய் கஞ்சியைத் தானும்
நாம் பருகியே வாழ்ந்திட டொலர் காசு இன்றைக்கு கொடுப்பாய்
காகிதாதிகள் கடும் விலை ஆதலால் இத்துடன் முடிக்கிறேன் மடலை
வேகிடும் எங்களுக்கு உதவ நீ மறந்தாலோ சுடலையில் பார்த்திடு எம் உடலை

தி.சாந்தகுமார்.

## மௌனத்தின் தேடல்- 554



## அன்பு வளரனும் ஆசை அழிந்திடனும்

ஆண்டவன் அளித்ததோ மானிடர்க்கு
ஆறறிவெனும் அரிய வரமே
அன்பை நேசிப்பவனே பூரண மனிதன்
ஆசையின் அடிமை அறிவின் அவலம்
ஆசையின்றேல் மனிதனோ அவனியில்
பரிபூரணமடைந்தவனாவான்

தங்கத் தமிழன்,
காரைநகர்.

## அறிவற்ற மனித மூளை

ஆட்சி வண்டியை இழுக்கும் ஆட்சியாளர்களின் அறிவு
ஆட்சி வண்டியில் படுத்து விட்டதும்
ஆட்சி வண்டியை இழுப்பவர்கள்
ஆற்றலற்ற, வலிமையற்ற குடிமக்களே என
சித்தரிக்கும் காட்சி!
அன்றைய காலம் நிலையான இறை ஆட்சி!
இன்றைய காலம் தலைக்கனத்தால் சிறை அட்சி!
அறிவற்ற மூளையின் செயல் என சாட்சி!

சி.சுகிர்தமலர்,
உரும்பிராய்.

## கண்காட்சி பொருளாகி...

பாண், பால் மா, அரிசி
காண் உணவுப் பொருள்
கண்காட்சிப் பொருளாகி
பசி வயிறு போக்குவதற்கு
பாதை இல்லை குடும்ப பாரம்
தலைக்கேறி தன் பாரம்
சுமக்கிறது தீர்வு உண்டா?

கார்வண்ணன்,
காவலூர்.

## ஏது காரணம்

மஞ்சுக்கு ஈடாக ஆடவனே
வண்டி இழுத்து சாலை
ஓரம் சாய்ந்த மாடு
கம்பில் விழுந்தது போல்
சென்னி சிதறி நீண்டே
வண்டியில் சுமை ஏறி
முண்டம் வேறாகிட
காரணத்தை பகிர்ந்து விடு

கவிக்கோ,
வவுனியூரான்.

## ஏது மெய்

காளை பூட்டி இழுக்கும்
வண்டியை காங்கேயங்
காளை போல் இழுத்தும்
சென்னி வேறாயும்
முண்டம் தனியாயும்
வேறுபட ஏது என்ன?
மெய்யும் திண் இன்றி
சென்னியும் சரிந்ததுவோ

உமாசிவம்,
ஏழாலை மேற்கு.

## மௌனத்தின் தேடல்- 555



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்க

## சொந்த முயற்சி

வாழ்வில் தன் கையே
என்றும் தனக்குதவி
அதை உணர்ந்த
இந்த மனிதன் -தன்
கவிழ்ந்த தலையோடு
கைகளால் இப்படி
வண்டியை
இழுக்கிறான் மனிதனை
மனிதன் ஏய்த்துப்
பிழைக்கும் இக் காலத்திலே

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை

## உழைப்பு

ஏறு கொண்ட ஊர்தியை
இழுக்கின்ற காளை
இவன் கந்தறுந்தும்
கண்டம் இழுபட்டும்
போனதுவோ ஏன்
மானிடா மாடாய்
மட்டற்று உழைத்து
மண்ணுக்கு உரமானோயோ?


தமிழ்பித்தன்,
பண்டாரி குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**போர் வெறித்த எல்லா கணங்களையும் கண்கள் கலங்கச் சொன்னாள். பேசியதை விட அவள் அழுதது தான் அதிகம். முன்பு போல் இல்லாது இளைத்துப் போயிருந்தாள். ஆனாலும் கண்களில் அந்தத் 'துறுதுறு' போகவே இல்லை. கூடவே அந்தப் பேச்சும். சொல்லப் போனால், அவள் இவ்வளவு பேசி இப்போது தான் நீதன் பார்த்தான்.**

## வலி சொல்லும் தொடர்... 25




அன்றிரவு நடுநிசி தாண்டி இரண்டு மணியிருக்கும். தூக்கம் வரவில்லை. வன்னியின் எல்லா வனப்பையும் எண்ணியவாறு அறையின் வெளித்தளத்தில் நின்று நட்சத்திரங்களைப் பார்த்துத் தனக்குள் பேசிக் கொண்டிருந்த நீதன், வால் நட்சத்திரம் ஒன்று விழுவதைக் கண்டதும் உள்ளே போய் படுக்கலாம் என்று, படுக்கையில் வந்து அமர்ந்தான். போனை தட்டி இணையத்தளத்துக்குச் சென்றான். அந்தப் படம் வெளிவந்திருந்தது.

'உடையார் கட்டு பகுதியில் சுற்றிவளைத்து மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றில் பெரும் எண்ணிக்கையான போராளிகள் கொல்லப்பட்டார்கள்" - என்று வெளியிடப்பட்ட படத்தின் நடுவில் மாஸ்டரின் சடலம் கிடந்தது. வெப்பக்காற்று நாசித்துவாரங்களில் மூசி அடித்தது. அங்கிருந்து அடுத்தடுத்த வாரங்களில் தான் நீதன், பாதுகாப்பு கருதி இந்தோனேசியா புறப்பட்டிருந்தான்.

குயிலனையும் மனைவியையும் பார்ப்பதற்காக அன்று காலையில் 'சார்ளி' கம்பவுண்ட் பக்கம் போயிருந்தான் நீதன். குயிலனின் அறைக் கதவு பூட்டியிருந்தது. எழுந்து வரும் வரைக்கும் பொறுத்திருக்கலாம் என்று தேநீர் போடுவதற்காக, முகாமின் பொதுச் சமையலறைப் பக்கம் போனான்.

முகாம் அப்போது தான் சாதுவாக விடிந்து கொண்டிருந்தது. 'சார்ளி' கம்பவுண்டின் நடுவில் அமைந்திருந்த பரந்த புற்தரையிலிருந்து பனிவிடை பெற்றுக் கொண்டிருந்தது. எவ்வளவு துயரிருந்தாலும் அவற்றைத் தூக்கத்தினால் மறைக்கத் தெரிந்த அகதிகள். இன்னமும் போர்வைக்குள்ளேயே கிடந்தார்கள்.

முதியவர் ஒருவர் பழைய பாண் துண்டுகளைப் பிய்த்து, பறவைகளுக்கு எறிந்து பசி தீர்த்துக் கொண்டு, ஓரமாய்க் குந்தியிருந்தார். அவரின் மறுகையிலிருந்த சிகரெட், அந்தக் குளிருக்கு விஸா கிடைத்த குதூகலத்தை இதயத்துக்குள் நிறைத்த படியிருந்தது. சிறகு லத்தியபடி சிலமக்-பை பறவைகள் பனிப்புற்களில் வாய் கழுவிக் கொண்டு, பாண் துண்டுகளைக் கொத்திக் கொண்டிருந்தன.

சமையலறைக்குள் காலடி வைத்த சில நொடிகளில், நீதன் அவளைக் கண்டான்.

வெந்நீரை எடுத்துக் கொண்டு, பால் எடுப்பதற்காகக் குளிரூட்டியின் பக்கம் திரும்பிய போது, அவள் அந்த அறையினுள் நுழைந்தாள். பார்த்தவுடனேயே இடது புருவத்துக்கு மேலிருந்த மச்சம் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது. ராதாவே தான்.

இருவருக்குள் இடி அவிழ்ந்து வீழ்ந்தது. கல்கிஸைக் கடற்கரையில் பொலிஸ்ஜீப் வந்து நின்றது போன்ற அதிர்ச்சி.

சமையலறையின் முன்பாக வந்து நின்று ஒரு மணி நேரமாகப் பேசியபோது, ராதா எப்படியும் மூன்று தடவைக்கு மேல் அழுதாள். கிளிநொச்சி முதல் அவுஸ்திரேலியா வரையிலான பயணவரை படத்தில், தானும் தனது ஒரே மகளும் அனுபவித்த எல்லாப்பாடுகளையும் நீதனிடம் கொட்டினாள்.

வார்த்துக் கொண்டு வந்த தேநீரை நீதனிடம் கொடுத்துவிட்டு, தான் இன்னொரு தேநீரைப் போட்டுக் கொண்டாள். முகாமின் தெற்கு மூலையிலிருந்த தகரக் கூடாரத் தடிக்கு நீதனை அழைத்துப் போனாள். போர் வெறித்த எல்லாக் கணங்களையும் கண்கள் கலங்கச் சொன்னாள். பேசியதை விட அவள் அழுதது தான் அதிகம். முன்பு போல் இல்லாது இளைத்துப் போயிருந்தாள். ஆனாலும் கண்களில் அந்தத் 'துறுதுறு' போகவே இல்லை. கூடவே அந்தப் பேச்சும். சொல்லப் போனால், அவள் இவ்வளவு பேசி இப்போது தான் நீதன் பார்த்தான்.

அப்போது தூக்கம் விட்டெழுந்த ராதாவின் மகள் அவர்களது அறையிலிருந்து கீழிறங்கி, முகாமின் நடுவில் பரந்து கிடந்த புற்தரையால் தனது பிஞ்சுக் கால்களை விசிறிய படி நடந்து வந்தாள்.

"அம்மா இஞ்ச நிக்கிறன். இஞ்ச வாங்கோ."

ராதாவின் குரலைப் பிடித்துக் கொண்டு அந்தக் குட்டி தேவதை, ஒரு கையில் சிறிய தொரு பொம்மையோடு நடந்து வந்தாள். அப்படியே ராகவன் மாஸ்டரைப் பார்த்தது போலவே இருந்தது. கன நாள்களுக்குப் பிறகு நீதனுக்கு நெஞ்சமெல்லாம் பூரிப்பினால் நிறைந்து வழிந்தது.

ராதாவைப் பார்த்துச் சிரித்து விட்டு, குழந்தையைப் பார்த்தான். நேரே தாயிடம் வரவும், அவளைக் கைத்தாங்கலாக எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் ராதா. இளைத்துப் போயிருந்த ராதாவின் உருவத்தில், தற்போது புதிய வெளிச்சமொன்று சேர்ந்து விட்டதைப் போல ஒளிர்ந்தாள் அவள். மகளின் நிழலில் ராதாவின் கண்கள் இன்னும் பிரகாசமாகச் சிரித்தன.

நீதனைக் காண்பித்து, மெதுவாக மகளின் காதுக்குள் ஏதோ சொல்லவும், அவள் தனது கூரான கண்களால் நீதனை இமை வெட்டாமல் பார்த்தாள்.

வெளித் தள்ளிய அவளது முயல் காதுகள் அப்படியே மீண்டும் மீண்டும் ராகவன் மாஸ்டரை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தன. நீதன் புன்னகைத்தபடி அவளை நோக்கிக் கைகளை நீட்டினான்.

கேட்ட மாத்திரத்திலேயே அலை மீது வழுக்கிய நுரைபோல அவள் பாய்ந்து வந்தாள். நீதன் குளிர்ந்து போனான். போர் தின்ற தனது தேசம் மீண்டும் உயிர் பெற்று ஈன்ற முதல் குழந்தை போல, அவளைக் கைகளில் ஏந்தி, தோள்களில் போட்டான். குளிர்ந்த தோட்டா ஒன்று உள்ளே ஊடுருவிப் பாய்ந்தது போலிருந்தது. அவனது கைகளில் அவள் தொடர்ந்து சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் இறுக்கி அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான் நீதன் அதுவரை சிரித்துக் கொண்டிருந்தவள், உடனே அவனை முறைத்துப் பார்த்தாள். நீதனின் மீசையைப் பிடித்து இழுத்து, தனது எதிர்ப்பைப் பதிவு செய்தாள்.

அப்போது தான் நீதன் கவனித்தான், ராதா அதே மென் மஞ்சள் நிறத்தில் கழுத்தைச் சுற்றி கறுப்பு வளையம் வைத்துத் தைத்த இறுக்கமான சட்டையைத் தான் அணிந்திருந்தாள்.

அன்று முழுவதும் முகாமின் பரந்து கிடந்த புற்தரையெங்கும் ராதாவின் மகளோடு விளையாடித் திரிந்ததில் நேரம் போனதே தெரியவில்லை நீதனுக்கு. இரவும் கூட பத்து மணிவரை ராதாவோடு அந்தப் புற்தரையிலிருந்து பேசி விட்டுத்தான் போய்ப்படுத்தான்.

ஏதோ ஓர் உணர்வு அதிகாலையிலேயே அவனைப் படுக்கையினால் உந்தித்தள்ளியது. இனியும் தூங்க முடியாது என்ற முழு நம்பிக்கையோடு, குளித்து விட்டு முகாமின் மூலைப் பக்கமாக உள்ள கூடாரத்தடிக்கு வந்தான் நீதன். வழக்கம் போல வானத்தைப் பார்க்காமல் ராதாவின் அறைப் பக்கமாகப் பார்த்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## அசைந்த சிலை?




"இரண்டிலுமிருக்கிற நல்ல அம்சங்களை எடுத்துக் கொள்கிறேன். கொள்ளைக்காரர், கட்டுப்பாடுடைய மாலுமிகளைவிடத் துணிவுள்ளவர்கள். உயிரைப் பணயம் வைத்து எந்த அளவிலும் ஈடுபடக் கூடியவர்கள். கட்டுப்பாடுடைய கடற்படை கண்டபடி எல்லோர் மரக்கலங்களையும் தாக்க முடியாது. சில நெறிகளுக்கும் உத்தரவுகளுக்கும் அந்தந்த அரசாங்க உடன்படிக்கைகளுக்கும் உட்பட்டது. கொள்ளைக்காரர்களுக்குள்ள துணிவையும் அரசாங்கக் கடற்படையின் கட்டுப்பாட்டையும் நெறியையும் இணைக்க நான் முயற்சிக்கிறேன்." என்று கூறினான் இளையபல்லவன்.

"இரண்டையும் இணைக்க முடியுமா?"

"முடியும்."

"இணைத்து என்ன செய்யப் போகிறீர்கள்?"

"சிறு கடற்படையைச் சொந்தமாக நிறுவப் போகிறேன்."

"நிறுவி?".

சற்று யோசித்த இளைய பல்லவன் நிதானமும், உறுதியும் தொனித்த குரலில், "கலிங்கத்தின் கடலாதிக்கத்தை உடைக்கப்போகிறேன்." என்று கூறினான். கூறிவிட்டுச் சில விநாடிகள் கோட்டைத் தலைவனைக் கூர்ந்து நோக்கவும் செய்தான்.

கோட்டைத் தலைவன் சில விநாடிகள் யோசித்துக் கொண்டு அறையில் அங்குமிங்கும் உலாவினான். பிறகு நின்று கேட்டான், "கலிங்கத்தின் மீது அத்தனை வெறுப்பா உங்களுக்கு?" என்று.

ஆம்.

என்று திட்டமாகக் கூறினான் இளைய பல்லவன்

"ஏன்?"

"கலிங்கத்தின் கடலாதிக்கம் சோழநாட்டுக் கடல் வாணிபத்துக்குப் பெரும் ஆபத்து. இப்பொழுது கடலில் உலவும் தமிழ் வணிகரின் உயிர்களுக்கே உலை வைக்கிறது கலிங்கம். இதை ஒடுக்க வேண்டும்.

"கொள்ளைக்காரருக்கு நாடு, நீதி, அபிமானம் என்பது உண்டா?"

"சாதாரணமாகக் கிடையாது.

ஆனால் அவையும் உண்டு என்பதற்கு நான் அத்தாட்சியாக இருக்க விரும்புகிறேன்.

"மறுபடியும் சில வினாடிகள் மௌனம் சாதித்த கோட்டைத் தலைவன், "நான் உமக்கு உதவுவேனென்று எதிர்பார்க்கிறீரா?" என்று வினவினான்.

"எதிர்பார்த்துத்தான் இங்கு வந்தேன். "நான் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யாதி பதியின் சேவகன், அவர் கோட்டை யின் தளபதி.

"அது தெரியும் எனக்கு.

"ஸ்ரீவிஜயத்தின் சக்கரவர்த்தி கலிங்கத்துடன் நட்பு கொண்டவர். "அதுவும் நீங்கள் ஏற்கெனவே சொல்லி இருக்கிறீர்கள்.

"அப்படியிருக்க நான் உங்களுக்கு உதவுவது ராஜத் துரோகமாகாதா!"

"ஆகும்...

ஆனால்..." என்று இழுத்த இளைய பல்லவன் குரலில் விபரீத தொனி துளிர்த்தது. அதைக் கோட்டைத் தலைவ னும் கவனித்தான். ஆகவே, "ஆனால் என்ன?" என்று சீற்றத் துடன் வினவினான்.

"ஆனால் நீங்கள் எந்தப் பக்கம் நியாயமிருக்கிறது என்பதை அறிந்து நடப்பவர் என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்த அறைக்கு வந்ததும் அதைப் புரிந்துகொண்டேன்." என்ற இளையபல்லவன் எதிரேயிருந்த பட்டயங்களில் ஒன்றைச் சுட்டிக்காட்டி, "அந்தப் பட்டயத்திலிருப்பவர் பெயர் ஸ்ரீவிஜயத்தின் உபதளபதி-என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவரையும் கொலை செய்திருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் அவரவர்களுக்குத் தகுதியாகவும் சமய சந்தர்ப்பங்களை முன்னிட்டும் முடிவுகளைச் செய்வீர்கள் என்பதை உணர்ந்தேன்" என்று கூறினான்.

இதைக் கூறியபோது இளைய பல்லவன் குரலிலிருந்த ஏளனத்தைக் கோட்டைத் தலைவன் கவனிக்கத் தவறவில்லை. சுயநலத்துக்குத் தான் எதையும் செய்ய வல்லவன், யார் பக்கமும் சேர வல்லவன் என்பதை இளையபல்லவன் புரிந்து கொண்டு விட்டானென்பதை உணர்ந்து கொண்ட கோட்டைத் தலைவன் உள்ளத்தில் பெரும் சீற்றம் உருவெடுத்தது.

எந்த அயோக்கியனும், தனது அயோக்கியத்தனத்தைப் பிறன் உணர்த்த விரும்புவதில்லை. ஆகவே தன் ஆத்மாவையே உற்றுப் பார்த்துத் தன் குணவிசேஷங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இளையபல்லவன் அலசிவிட்டதும் அதில் ஆக்ரோஷமடைந்த கோட்டைத் தலைவன், "உமக்கு உதவ நான் மறுத்தால்?" என்று இரைந்து அந்த அறையே கிடுகிடுக்கும் படியாகக் கூவினான்.

அந்தக் கூச்சலை இளைய பல்லவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அறைகூட அவன் நினைப்பிலிருந்து நீங்கியது. அவன் கண்கள் அந்த அறையின் ஒரு மூலையை நோக்கி நிலைத்தவை நிலைத்தபடி நின்றன. அங்கிருந்தது ஒரு சிலை. அது மெள்ள அசையவும் செய்தது. ஏதோ பிரமை பிடித்தவன் போல் அதைப் பார்த்துக்கொண்டே நின்றான் இளையபல்லவன்.

### மஞ்சளழகி?

"உமக்கு நான் உதவ மறுத்தால்?" என்ற கோட்டைத் தலைவனின் அக்ரோஷக் கூச்சலைக்கூட அறிவில் புகவொட்டாமல் தடுத்துத் தன்னைப் பெரும் பிரமைக்கு உள்ளாக்கிக் கொண்டு அறைக் கதவுக்கருகில் சிறிதும் அசையாமல் சிலையென நின்ற சித்தினிப் பெண்ணை இமை கொட்டாமல் பார்த்து நின்ற இளையபல்லவன், அந்த அழகுச் சிலை அசையவும் ஆரம்பித்தபின் அதன் நடை ஒய்யாரத்திலும் மனத்தைப் பறி கொடுத்தான். அதுவரையில் தான் வாழ்வில் கண்ட எந்தச் சாதியையும், அந்த வடிவழகி சேர்ந்தவளல்லவென்பதைப் பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொண்டாலும், அவள் எந்தச் சாதி, எந்த நாட்டவள் என்று தீர்மானிக்க முடியாத அளவுக்கு அவள் உடலழகு இடத்துக்கு இடம் மாறுபட்டிருந்ததைக் கவனித்த இளைய பல்லவன் எங்கோ கானகத்தில் புகுந்தவன் என்றும் காணாத ஒரு புத்தம் புது மலரைக் கண்டு விட்டால் எந்த நிலையை அடைவானோ அந்த நிலையை அடைந்திருந்தான்.

அவள் முகத்தில் லேசாகச் சீனப் பெண்களுக்கு உள்ள களை இருந்ததேயொழிய, நல்ல கூர்மையாயிருந்த நாசியும், அடர்த்தியாக வளர்ந்திருந்த புருவங்களும் அவள் சீனத்துப் பைங்கிளி அல்லவென்பதை அறிவுறுத்தின. அவள் சரீரச் சருமத்தில் ஓடியிருந்த லேசான மஞ்சள் நிறமும் சீனத்து மாதர் உடலிலுள்ள மஞ்சளைப் போலில்லாமல் மஞ்சள் பூசிக் குளித்த பின்னுள்ள உடல் வண்ணத்தை அடைந்திருந்ததால், ஏதோ பக்குவப்பட்ட தங்கம்போல் பளிச்சிட்டது.

நன்றாக எழுந்து வளைந்திருந்த அவள் கன்னக் கதுப்புகளும் அதிக அகலமில்லாவிட்டாலும் மிக வசீகரமாகத் தெரிந்த நுதல் பிரதேசமும், உருண்டு தொங்கிய கைகளும், புத்தொளியொன்றை இயற்கையாகவே பெற்றிருந்ததையும், தெரிந்தும் தெரியாமலுமிருந்த அந்த ஒளியும் அவளைச் சொர்ண தேவதையைப் போல அடித்திருந்ததையும் கவனித்த இளைய பல்லவன் மனத்தை விட்டு அகற்ற முடியாத பெரும் விபரீத அழகுக்கு முன்பாகத் தான் நிற்பதை அறிந்து கொண்டான்.

அத்தனை அழகையும் தோற்கடிக்கும் படியாக அவனை உற்று நோக்கிய விழிகளில்கூட இனங்களிரண்டு கலந்து கிடந்தன. அவள் கருவிழிகளைச் சுற்றியிருந்த இடம் அசல் வெளுப்பாயில்லாமல் சற்று செவ்வரி படர்ந்திருந்ததால் சாவகத்தின் குரூரமான பகத் இனத்தாரின் விழிகளைப் போல் அவை இருந்தாலும், விழிகளில் குரூரத்துக்குப் பதில் சாந்தமும் விஷமமும் நிலவிக் கிடந்தன. அவள் பார்வையிலிருந்து குணத்தைப் பற்றி எதுவும் சொல்ல முடியாதிருந்தது. வெறுத்த பார்வையல்ல, வஞ்சகப் பார்வையுமல்ல. இருந்தாலும் பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் தொனிக்கும் பார்வையை அந்த விழிகள் உதிர்த்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### வேலு விரும்பியது



(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது ஒலித்தம்பி மற்றவர்களிடம் "இந்த ராட்சஸனிடம் குறட்டை ஒலியோடு ஒரு பெண் முணகும் சத்தமும் கேட்கிறது. கோட்டையின் தென்புற அறையிலிருந்து வருகிறது" என்றான்.

அப்போது வேலு "அப்படியா! நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறி எழுந்து சென்றான். அவன் அந்த அறையை அடைந்து ஜன்னல் வழியாகப் பார்த்தான். அங்கு அழகிய இளம் பெண் கண்ணீரும் கம்பலையுமாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவன் மெதுவாக அந்த அறைக்குள் போய் அவளருகே நின்றான். அவள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைக் கொண்டு அவள் யாரோ அரச குமாரி என்று தெரிந்து கொண்டான். அவள் வேலுவைக் கண்டு பயந்தாள். அவனோ தாழ்வான குரலில் "பயப்படாதே. நீ யார்? உனக்கு உதவுகிறேன்" என்றான். அவளும் நான் இந்த நாட்டு இளவரசி. என் பெயர் ரத்தின மாலை. நான்கு நாட்களுக்கு முன் என் தோழிகளுடன் மலைக் கோவிலிலுள்ள அம்பிகையை தரிசிக்கச் சென்று கொண்டிருந்தேன். அப்போது இந்த ராட்சஸன் என்னைக் கவர்ந்து வந்து இங்கே அடைத்து விட்டான். அவனது மகன் என்னைப் பார்த்து மணந்து கொள்ள விரும்பினானாம். ஆனால் கிழ ராட்சஸன் தன் மகனுக்கு ஒரு ராட்சஸப் பெண்ணையே மணம் செய்து வைக்கப் போவதாகக் கூறவே அவன் கோபித்துக் கொண்டு இந்தக் கோட்டையை விட்டு எங்கேயோ போய் விட்டானாம். முடிவில் ராட்சஸன் என்னை அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கத் தீர்மானித்து எண்ணைக் கொண்டு வந்து இங்கே சிறை வைத்திருக்கிறான். அவன் தன் மகன் வந்ததும் என்னை அவனுக்கு மணம் செய்து வைக்கப் போகிறானாம்" என்றாள்.

வேலு அவள் கூறியதைக் கேட்டு "பயப்படாதே நாளை நான் இந்தச் சிறையிலிருந்து உன்னை விடுவித்துக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய் விட்டு விடுகிறேன்" என்று கூறி விட்டுத் தன் மூன்று சகாக்கள் இருந்த இடத்திற்கு வந்தான். காலையானதும் கிழ ராட்சஸன் நீண்ட பற்களையும் நகங்களையும் கொம்புகளையும் கூட அணிந்து கொள்ளாமல் வேலுவைக் காண வந்தான். அவனிடம் "என் மகனைப் பற்றி விபரமாகச் சொல்" என்று கூறினான்.


வேலுவோ "உன் மகனுக்கு இந்நாட்டு இளவரசியைக் கல்யாணம் செய்து வைக்க மாட்டாயா? அவன் தனக்கு இந்தக் கல்யாணத்தை நீ செய்து வைக்கப் போவதில்லை என்று நினைத்து கடலில் மூழ்கி உயிர்விடப் போகிறானாம்" என்றான்.

ராட்சஸனோ "ஐயோ! அவனுக்கு இளவரசியைக் கல்யாணம் செய்து வைக்கத் தீர்மானித்து இளவரசியைக் கூடக் கொண்டு வந்து இங்கே சிறை வைத்திருக்கிறேனே. இப்போது என் மகன் எங்கே இருக்கிறான்?" என்று கேட்டான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




மன்னன் தங்கி இருந்த மணிமண்டபத்தை அடைந்தான்; பதும பீடத்தில் மன்னனைக் காணவில்லை; மகுடம் கையில் ஏந்தி மன்னன் காத்திருப்பான் என்று நினைத்தான்; பிள்ளையார் பிடிக்கப் பூதம் புறப்பட்டது போல் புயல் கிளம்பியது; தாய் என நினைத்து வரும் இராமனை நோக்கி, உயிர் உண்ணும் பேய் போலக் கைகேயி வந்தாள்.

"மன்னன் தன் வாயால் சொல்ல நினைப்பதை நான் கூறுகிறேன்" என்றாள்.

"தந்தை கட்டளை இடத் தாய் அதைத் தெரிவிக்க, அந்த ஆணையை ஏற்று நடக்கத் தனயன் யான் காத்துக் கிடக்கிறேன்" என்றான்.

"கடல் சூழ்ந்த உலகத்தைப் பரதன் ஆள்வான்; நீ சடைகள் தாங்கித் தவமேற்கொண்டு காடுகளில் திரிந்து, நதிகளில் நீராடி, ஏழிரண்டு ஆண்டுகளில் திரும்பி வர வேண்டும் என்பது மன்னன்" ஆணை என்றாள்.

வியப்போ திகைப்போ அவனைத் தாக்கவில்லை; அதிர்ச்சிகள் அவனை அணுகவில்லை; தாமரை மலரை நிகர்த்த அவன் முகப் பொலிவு முன்னிலும் அதிகம் ஆனது; அதனை வென்று விட்டது. சுமையை ஏற்றுக் கொள்ள அமைந்தது தசரதன் ஆணை; அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. சுமையை ஏற்க வந்தவனுக்குச் சுதந்திரம் கிடைத்தது.

தசரதன் எருதினை இழுத்து வந்து வண்டியின் நுகத்தடியில் பூட்டினான். அருள் உள்ளம் படைத்தவள் கைகேயி; அதனை அவள் அவிழ்த்து விட்டாள்; பாரம் அவனை விட்டு நீங்கியது; அதற்காக அவளுக்கு நன்றி காட்டினான்; அவன் முகம் மும்மடங்கு பொலிவு பெற்றது.

"அரசன் பணி அது அன்று ஆயினும், தாயின் கட்டளை இது; இதை மறுக்க மாட்டேன்; என் பின்னவன் பெறும் செல்வம் நான் பெற்ற தேயாகும்; இதைவிடச் சிறந்த பேறு எனக்கு உண்டோ இன்றே காடு ஏகுகின்றேன்; விடையும் கொண்டேன்" என்று கூறி வருத்தம் சிறிதும் காட்டாமல் அவன் அவளை விட்டு அகன்றான்.

**கோமகள் கோசலை துயர்**

இராமன் வருவான் என்று கோசலை எதிர்பார்த்தாள்; பொன்முடி தரித்து வருவான் என்று நினைத்தாள்; சடைமுடி தாங்கி அவள் முன் வந்து நின்றான்; அரசனாக வேண்டியவன் தவசியாய்க் காட்சி அளித்தான்.

சாமரம் வீசும், கொற்றக் குடை சுற்றிவரும்; மகுடம் புனைந்து மகன் வருவான் என்று அவள் காத்திருந்தாள்; தவக் கோலத்தில் வந்து காட்சி அளித்தான் அவன்.

"இம் மாற்றத்துக்குக் காரணம் என்ன?" என்று கேட்டு அவன் மாற்றத்தை எதிர்பார்த்தாள்.

"பரதன், உன் நேய மகன், மணிமுடி புனைகின்றான்" என்றான்.

"முறையன்று; எனினும், அவனிடம் எந்தக் குறையும் இன்று. உன்னைவிடப் பரதன் நல்லவன்" என்று பாராட்டினாள்.

"தவசிகள் உறையும் காட்டுக்கு அவசியம் நான் போக வேண்டும் என்பது அடுத்த கட்டளை" என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சம்சாரம் அது மின்சாரம்
இயற்றியவர் : வைரமுத்து
இசை : சங்கர் கணேஷ்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்



சம்சாரம் அது மின்சாரம்
சம்சாரம் அது மின்சாரம்
அன்பு கொள்ள யாருமில்லை
எந்த நெஞ்சும் ஈரமில்ல சம்சாரம்

பந்தமில்லை பாசமில்லை
சொந்தமிங்கு சொந்தமில்லை சம்சாரம்
நேரம் வந்து நெருங்கித் தொட்டா
ஷாக் அடிக்கிற மின்சாரம் (சம்சாரம்)

அப்பன் என்ன ஆத்தா என்ன ஒப்புக்குத்தானடி
பாறாங்கல்ல பெத்துபுட்டா பாசம் ஏதடி
பெத்தப்புள்ள தந்த பணம் உப்புக்கு ஆகுமா
தாய்ப்பாலுக்கு கணக்கு போட்டா தாலி மிஞ்சுமா

வாயக்கட்டி வளத்த புள்ள
மல்லுக்கட்டி நிக்குதடி
வாங்கித் தந்த காசுக்கெல்லாம்
வட்டிகட்ட சொல்லுதடி
கோடு ஒண்ணு கிழிக்க வச்சி
கும்மி அடிக்குது அம்மாடி...(சம்சாரம்)

காலில் ஒரு முள்ளு தச்சா கண்ணு கலங்குது
கண்ணில் ஒரு தூசு பட்டா கைதான் ஓடுது
சேவல் அன்று கோடு கிழிச்சி வேலி போட்டது
வேலி தாண்டி கோழி போக வேளை வந்தது

அக்கம்பக்கம் யாருமில்லை ஆபத்துக்கு பாவமில்லை
பாவத்துக்கு சட்டம் இல்ல மீறுவது குத்தம் இல்ல
பாசத்துக்கு ரக்க மொளச்சு பறந்து போகுது தன்னாலே
சம்சாரம்)

அன்பு கொள்ள ஆளுமுண்டு
நெஞ்சுக்குள்ளே ஈரமுண்டு சம்சாரம்
பந்தமுண்டு பாசமுண்டு
சொந்தத்துக்கு உள்ளம் உண்டு சம்சாரம்
சூட்சுமத்தை தெரிஞ்சிகிட்டா ஒளி கொடுக்கிற மின்சாரம்

வயசு வந்த புள்ள ஒண்ணு பாடம் படிக்குது
அன்பு ஒன்றே வாழ்க்கை என்ற அர்த்தம் வெளங்குது
கட்டிலுக்கு ஆசப்பட்டு புத்தி அலைஞ்சுது
கணவர் இங்கே பிள்ளை என்றே கண்டு கொண்டது

தன்னடக்கம் வேணுமம்மா பெண்ணுக்கது நல்லதம்மா
காமத்துக்கும் மோகத்துக்கும் காலநேரம் உள்ளதம்மா
இல்லறத்தில் இன்ப துன்பம் இரண்டும் உள்ளது பொன்னம்மா
(சம்சாரம்)

இந்த சொந்தம் என்ன சொந்தம் யாருக்கும் தோணல
வாய் திறந்தது சொல்ல வந்தா வார்த்த வரல
வானவில்ல சின்னப்புள்ள வளைக்க பாக்குது
ஆகாயத்தில் ஊஞ்சல் கட்ட ஆசப்படுது

சிறகொண்ணு மொளைக்கு முன்னே பறக்குது பட்டாம்பூச்சி
காமதேவன் ராஜாங்கத்தில் இது ஒரு கண்ணாமூச்சி
ஆத்துமேட்டில் எழுதி வச்சத அலை அடிச்சுது அண்ணாச்சி
(சம்சாரம்)

# அரசு சிந்திக்காத கொள்கைகளை மக்களாவது சிந்திக்க வேண்டும்

**“ இனவாத அரசியல் செய்யும் நேரத்தில் நாட்டை வளர்த்திருக்கலாம். மதவாத அரசியல் செய்யும் நேரத்தில் நாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்திருக்கலாம். யுத்த வெற்றிவாத அரசியல் செய்யும் நேரத்தில் இலங்கையை புதிய பொரு ளாதார யுகத்தை நோக்கி நகர்த்துவதற்கான பல வியூக சிந்தனைகளை வகுத்திருக்கலாம் என்பதே பெரும்பாலான இலங்கையர்களின் சமகால சிந்தனையின் குவியல்களாக உள்ளது. ”**



இலங்கைத் திருநாட்டினுடைய சமகால பொருளாதாரத்தின் பாரிய வீழ்ச்சியானது தற்காலிகமாக ஒரு சோமா லியாவின் நிலையை எட்டியுள்ளது. இதற்கு முழுக் காரணம் தற்சார்பு பொருளாதாரக் கொள்கையும் அதன் தொடர்ச்சியான செயற்றிறனும் இலங்கைத் திருநாட்டின் அரசிடமும் இலங்கை வாழ் மூவின மக்களிடமும் இல்லாததே பெரும் துரதிர்ஷ்டமாகும்.

உடுத்தும் உடுபுடைவையிலிருந்து வயிற்றுப் பசியைப் போக்கும் அரிசி வரை இலங்கை பிற நாடுகளின் இறக்குமதியிலே தான் பெரிதும் தங்கி இருக்க வேண்டிய சூழ்நிலையே கடந்த காலங்களில் இருந்து சமகால பொருளாதார நெருக்கடி வரை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வளங்களையும் மற்றும் மக்களையும் பயன்படுத்தி ஓரளவு உள்நாட்டு உற்பத்தியை செய்யக் கூடிய தற்சார்பு பொருளாதாரத்தை சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பொருளாதார உத்திகளை கையில் எடுக்காமல் உதாசீனம் செய்ததாலேயே இலங்கை அரசும் அதன் மக்களும் உள்ளாடைகளைக் கூட இறக்குமதி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்சார்பு பொருளாதாரக் கொள்கையை ஆட்சியாளர்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நாட்டில் நிலை நிறுத்தாததற்கு முக்கிய காரணம் இனவாதம், மதவாதம், யுத்த வெற்றிவாதம் என்ற துவேச சிந்தனையின் அடிப்படையில் அரசும், மூவின மக்களும் ஒற்றுமையின்றி ஒவ்வொரு கோணத்தில் நகர்ந்து செயற்பட்டதேயாகும்.

இனவாத அரசியல் செய்யும் நேரத்தில் நாட்டை வளர்த்திருக்கலாம். மதவாத அரசியல் செய்யும் நேரத்தில் நாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்திருக்கலாம். யுத்த வெற்றிவாத அரசியல் செய்யும் நேரத்தில் இலங்கையை புதிய பொருளாதார யுகத்தை நோக்கி நகர்த்துவதற்கான பல வியூக சிந்தனைகளை வகுத்திருக்கலாம் என்பதே பெரும்பாலான இலங்கையர்களின் சமகால சிந்தனையின் குவியல்களாக உள்ளது.

தாய்த் திருநாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் ஒரு மேலான நிலைக்கு இட்டு செல்லும் பாரிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழும் மூவின மக்களுக்கும் உண்டு. இதை இலங்கை வாழ் மக்கள் யாரும் எளிதில் புறந்தள்ளி விட முடியாது. அப்படி புறந்தள்ளி விட்டால் இலங்கையை இறைவனால் கூட, காப்பாற்ற முடியாது.

நாட்டின் மூவின மக்களும் இன, மத அடையாளங்களைத் துறந்து ஒற்றுமை என்ற குடையின் கீழ் ஒரு புள்ளியில் இணைந்து நாம் எல்லோரும் இலங்கையர் என்ற ரீதியில் நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்துக்காக தூரநோக்குடனும், இதய சுத்தியுடனும் செயற்பட்டால்தான் இலங்கையின் சரிந்து போன பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பொருளாதார நிபுணர்களாக மீட்பர்களாக ஒவ்வொரு இலங்கையரும் மாற முடியும்.

ஒரு நாட்டின் ஆளும் அரசானது நாட்டின் தன் நிறைவற்ற பொருளாதாரத்தில் தரிசாகிப் போனால் ஜனநாயகத்தின் மன்னர்களாகிய மக்கள்தான் அந்த நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிபுணத்துவம் வாய்ந்த சிற்பிகளாக மாற வேண்டும். இதுவே பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்று எழுச்சி கண்ட பல நாடுகளின் வரலாறுகளில் என்றும் மாற்ற முடியாத விதியாக இருந்து வருகிறது.

இலங்கை அரசு சிந்திக்காத சில தற்சார்பு பொருளாதார கொள்கைகளை மக்களாவது தம் நாட்டுக்காக இந்த கொரோனா பெரும் தொற்றிலாவது சிந்திக்க முற்பட்டிருக்க வேண்டும். நாடு பூராவும் தீர்க்கதரிசனமற்று கொண்டாட்டங்களில் திளைத்த மக்கள் இன்று திண்டாட்டங்களில் வருந்துவது ஒருபோதும் ஏற்புடையதல்ல.

இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான புரிந்துணர்விலும், ஒற்றுமையிலும் தோற்றுப் போன இலங்கை அரசும் அதன் மக்களும் தற்போது பாரிய பொருளாதாரத்தின் வீழ்ச்சியில் தோற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். தோல்வி நிரந்தரமானது அல்ல. அதைப்போல் வெற்றியும் நிரந்தரமானது அல்ல. நம் தாய்நாடும் நாம் இலங்கையர் என்ற உணர்வுமே எப்போதும் நிரந்தரமானது என்பதை ஒரு தற்சார்பு பொருளாதார புரட்சியின் ஊடாக அண்டை நாடுகளுக்கும் உலகுக்கும் இலங்கை வாழ் மக்கள் பறைசாற்ற வேண்டும்.

**சாம்.ரமேஸ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரா (ஜோர்டான்)

ஜோர்டானின் யார்மன்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிடோன் அல் மொகைசின் ஆய்வுப்படி அவர்களது குடிநீர் விநியோக குழாய்கள் கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 20 ஆயிரம் பேர் மட்டும் வாழ்ந்திருந்த பெட்ரா நகரில் ஆண்டுதோறும் பெய்த மழையின் அளவு மிகமிக குறைவே. ஆனால் அவர்களது நுட்பமான நீர்த்தேக்க மற்றும் நீர் சுழற்சி பயன்பாடு காரணமாக ஒரு இலட்சம் பேர் பயன்படுத்தும் அளவு நீர்வளத்தைப் பெருக்கி இருக்கிறார்கள்.

நபாட்டியன்கள் கலை இலக்கிய பொறியியல் திறன் பெற்றவர்கள். அவர்களது காலத்து கலைஞர்களின் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு 6 ஆயிரம் பேர் அமரக்கூடிய திறந்தவெளி அரங்குகள் கட்டப்பட்டிருந்திருக்கின்றன.

சாக்கடலுக்கும் (Dead Sea) கல்ஃப் அக்காபாவுக்கும் இடையே நீண்டு கிடக்கும் மலைத்தொடரின் அரேபிய தீபகற்பப் பகுதியில் உள்ள மலைக்குன்றுகளை ஹர் மலைப் பிரதேசம் என்பர். மணற்கல் வகையைச் சார்ந்த பாறைகள் வெள்ளை நிறத்திலும் வெண்மை கலந்த செந்நிறத்திலும் இயற்கையாக அமைந்த அப்பகுதியில்தான் பெட்ரா நகர் உருவாக்கப்பட்டிருந்தது.

அல் கசினெ என்றழைக்கப்பட்ட கருவூலகத்துக்கு முன் அடுக்கக முறையில் உலைகள் இருந்திருக்கின்றன. அதன் பயன்பாடு பற்றி முழுமையாக அறியப்படாவிட்டாலும் அவர்களின் கூட்டு முயற்சி, ஒற்றுமை, கடுமையான உழைப்பு ஆகியவற்றை புரிந்து கொள்ள முடிகிறது. பெட்ராசின் நுழைவிடத்தில் வாடி மூசா என்றொரு கிராமம் இருக்கிறது. வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மிகப் பெரிய தோட்டம் அங்கு காணப்படுகிறது. வாடி மூசா என்பதற்கு மோசஸ் பள்ளத்தாக்கு என்று பொருள்.

யூதர்களின் வேதநூலான தோராவை இயற்றியவர் மோசஸ். யூதர்களின் தீர்க்கதரிசியான மோசஸ் அடிமைப்பட்டுக் கிடந்த யூதர்களை காப்பாற்றி கானான் மலைத்தொடருக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவரை பின் தொடர்ந்து வந்தவர்களுக்கு தாகம் எடுத்தது. குறிப்பிட்ட அப்பகுதியில் தனது தெய்வீக சக்தியால் பாறையை உடைத்து அவர்களுக்கு தண்ணீர் எடுத்துத் தந்தாராம். அந்த இடத்தில் நீரூற்று ஒன்று எழும்பி இன்றும் கொட்டிக் கொண்டிருக்கிறாம்.

மோசசின் சகோதரர் ஆரோனும் யூதர்களின் வழிகாட்டியாக, தீர்க்கதரிசியாக இருந்தவர்தான். அவரது கல்லறை காணப்படும் பகுதியை ஆரோன் மலைத்தொடர் என்றே அழைக்கிறார்கள்.

1994 இல் அமரிக்காவின் சின்சினாட்டி நகரில் பெட்ராவில் கண்டெடுக்கப்பட்ட சிறிய மண் சிற்பங்கள் பயன்படுத்திய பாத்திரங்கள், ஓவியங்கள், கலை வேலைப்பாடுகள் கொண்ட கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை பொது மக்கள் பார்வையிடுவதற்காக கண்காட்சியாக வைத்திருந்தனர்.

இந்த கண்காட்சிக்குப் பிறகுதான் வெகுஜன மக்களுக்கு பெட்ரா நகர் பற்றி முழுமையான கவனம் கிடைத்தது.

இன்று ஜோர்டானின் அதிக வருவாயை ஈட்டித்தரும் சுற்றுலாத்தலமான பெட்ரா விளங்குகிறது.

1985 இல் யுனெஸ்கோ அமைப்பு பெட்ரா நகரை உலக கலாசாரச் சின்னமாக அறிவித்தது. ஸ்மித்சோனியன் என்கிற பிரபல பத்திரிகை வெளியிட்ட இறப்பதற்கு முன் உலகில் அவசியம் பார்க்க வேண்டிய 28 இடங்கள் என்கிற பட்டியலில் பிரதானமான இடத்தை பெட்ராவுக்கு அளித்துள்ளது.

மணல் படிந்த சாலை, கடினமான பாறைகள், தீயைப் போல பொசுக்கும் வெயில், அவ்வப்போது அடிக்கும் மணல் புயல், வறண்ட பூமி, மழையை தராத வானம் என்று எல்லாக் காரணிகளும் மனிதர்களை வெறுப்பின் உச்சிக்கு நெருக்கும் சூழலிலும் மனிதர்கள் நினைத்தால் ரோஜாவைப் போல் ஒரு நகரத்தையே உருவாக்க முடியும் என்பதற்கான சாட்சிதான் 'பெட்ரா'.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2539

### மதுமிதா

ஜப்பானில் குடித்து விட்டு வந்தால் அலாரம் அடிக்கும் மிஷின் கண்டுபிடிப்பு...



குடிச்சிட்டு வந்தா ஆளை அடிக்கிற மிஷினே எங்க கிட்ட இருக்குய்யா அது பேர் பொண்டாட்டி..

### சஜிவன்




### கல்பனா

ஒரு முறை வெளியே வந்து விட்டால் உள்ளே செல்லவே முடியாது...



ஒரு முறை உள்ளே சென்று விட்டால் வெளியே வரவே முடியாது...



### மிதுசன்

சாணியில் முள் கிடையாது. ஆனால்...




அதை மிதித்தவன் நொண்டி நொண்டி தான் நடப்பான் ஏன்னா, டிசைன் அப்படி...

### றொக்ஷிகா

அவளை கல்யாணம் பண்ண
முடியலையேன்னு சிலர்!!
இவளை கல்யாணம்
பண்ணிட்டோமன்னு சிலர்!!
எவளையுமே கல்யாணம்
பண்ண முடியலையேன்னு பலர்!!
ஆக எவனும் நிம்மதியா இல்ல...

### வினோ

வரும் போது என்னமோ சுகப் பிரசவம் தான்...



மாசக் கடைசில தான் சிசேரியன் பண்ண வேண்டி இருக்கு....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

283

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வீட்டிற்கொரு ஜம்புமரம் நடுவோம்

எளிமையும் எண்ணற்ற சத்துக்களையும் கொண்டது ஜம்பு. இது வேர் முதல் இலை வரை பயன்படக்கூடியதும் மருத்துவ குணங்களைக் கொண்டதும், கோடை கால தாகத்தையும், பசியையும் தீர்க்கும் அருமருந்தும் ஆகும்.

### ஜம்பு மரத்தின் வரலாறு

முதலில் ஜம்பு மரத்தின் பெயர்கள் பற்றி பார்ப்போம். தமிழிலே "ஜம்பு" என்றழைப்பது போல் ஆங்கிலத்தில் இதனை றோஸ் அப்பிள் (Rose apple), பெல் பழம் (Bell fruit), றோயல் அப்பிள் (Royal apple) வாக்ஸ் பழம் (Wax furit) என்றழைப்பார்கள். அதிலும் தாய்வான் நாட்டைச் சேர்ந்தவர்கள் கருஞ்சிவப்பு நிறமான ஜம்புப் பழத்தை (Black pearl) அதாவது கறுப்பு முத்து என்று அழைப்பார்கள்.

இதனுடைய தாவரவியல் விஞ்ஞானப் பெயர் Syzygium samarangense ஆகும். ஜம்பு மரம் இந்தியா, இந்தோனேஷியா நாடுகளினதும், அந்தமான், நிக்கோபார், மலேயா தீவுகளின் கடற்கரையோடு காடுகளினதும் சுதேச மரமாகும். அதன் பிறகு, வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே பிலிப்பைன்ஸ் தீவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. அசோகச் சக்கரவர்த்தியின் மகன் "மகிந்த" என்ற மன்னன் ஜம்பு மரத்தை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இலங்கை மன்னன் தேவநம்பியதீசனிடம் கொடுத்ததாக மகாவம்ச வரலாறு கூறுகிறது.

ஜம்புமரம் உயர் வெப்ப மண்டலத்தின் தாழ்நிலங்களில் மிகச் சிறப்பாக வளரக்கூடியது. இலங்கையின் காலநிலையைப் பொறுத்த வரையில் இது மிகவும் சிறப்பாக வளரக்கூடியது. அதுவும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் ஜம்பு மரம் கனிகளைத் தரக்கூடிய காலமாகும். ஒரு மரத்தில் இருந்து 700 வரையான கனிகளைப் பெற முடியும். ஒருமரம் 15 அடி முதல் 50 அடிவரையும் வளரக்கூடியது. முன்னைய காலங்களில் ஜம்பு பழங்களை உண்டு பார்த்தபின் இப்போது இந்த ஜம்பு மரத்துக்கும் எமது இந்து புராணக் கதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறிய முடிகிறது. விஸ்ணு புராணத்தில் இந்தப் பிரபஞ்சம், 7 தீவு கண்டங்களாகவும் அதனைச் சூழவுள்ள 7 சமுத்திரங்களாகவும் பிரிக்கப்பட்டது. ஒரு கண்டத்தில் ஜம்பு மரங்கள் செறிந்து காணப்பட்டதால் ஜம்புத் தீவு அதாவது ஜம்பு மரங்களின் நாடு என்று அழைக்கப்பட்டது என்று விஸ்ணு புராணத்தில் கூறப்படுகின்றது. எம் எல்லோருக்கும் தெரிந்த அயல் நாடான இந்தியாவே முன்பு ஜம்புத்தீவு என்றழைக்கப்பட்டது.

இராமாயணத்தில் இராமர் 14 ஆண்டு கால வனவாசத்தின் போது காட்டிலுள்ள இந்த ஜம்புப் பழங்களை உண்டார் எனவும் இராமாயணக் கதை கூறுகின்றது. இந்த ஜம்பு மரம் பெரிய மரக்கொப்புகளைக் கொண்டதும், பெரிய நிழல் தரக்கூடிய குளிர்ச்சியான மரம் என்பதால் பல ஞானிகள், யோகிகள் இந்த மரத்தின் கீழே அமர்ந்து தியானம் செய்தார்கள் என பல கதைகள் உண்டு.



விஸ்ணு புராணத்தின் இன்னுமொரு பகுதியில் இந்த ஜம்பு பழங்கள் மிகவும் பெரியன. அதாவது யானையளவு பெரியன எனவும் மலையொன்றின் உச்சியிலே காணப்பட்ட ஜம்பு மரங்களில் இருந்து கீழே விழுந்து வெளிப்பட்ட பழச்சாறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து நதியாக ஓடியது எனவும் அதுவே ஜம்பு நதி எனவும் கூறப்படுகின்றது.

அதைவிட இன்று இந்தியாவின் திருச்சிராப்பள்ளியின் அருகிலுள்ள ஸ்ரீரங்கத்தில் ஜம்புகேஸ்வர கோயிலின் ஸ்தல புராணத்தில் இன்றும் கோயிலில் காணப்படுகின்ற ஜம்பு மரத்தின் கீழுள்ள சிவலிங்கம் பற்றி ஒரு கதை இருக்கின்றது. சிவபெருமான் ஒரு நாள் மரமொன்றின் கீழ் இருந்து தியானம் செய்து கொண்டிருக்கும் பொழுது அருகில் உள்ள மரமொன்றிலிருந்து பழம் ஒன்று இவர் அருகில் விழுந்தது. சிவபெருமான் அந்தப் பழத்தை எடுத்து உண்டுவிட்டு அதனுடைய வித்தை வெளியே துப்பினார். அந்த வித்திலிருந்து முளைத்த மரமே ஜம்புமரமாகவும் சிவபெருமானே சிவலிங்கமாகவும் அவ்விடத்தில் இன்றும் வழிபடப்படுகின்றது.

பழம் உணவாகப் பயன்படுகின்றது. நீர்த்தன்மை கூடிய பழம், உடலின் குளிர்மையைப் பேணுகிறது. பழத்தில் பழச்சாறு செய்து பருகலாம். ஒரு நீரிழிவு நோயாளியைப் பார்த்து ஒரு துண்டு மாம்பழம் உண்ணுங்கள் என்போம். ஒரு துண்டு சுவைத்தவரால் மீதியைவிட்டு வைக்க மனம் வராது. இவ்வாறு உண்டு நீரிழிவு கட்டுப்பாடு இழந்து மருத்துவமனையே வாசம் என இருப்போர் மத்தியில் ஜம்புப்பழத்தின் அறிமுகமானது ஒரு கொடை. இந்தப்பழத்தை விரும்பிய அளவு உண்ணலாம். கெடுதல் இல்லை.

ஜம்புப்பழம் இலை, பூ, விதைகள், வேர், பட்டை என்பவற்றில் மருத்துவத் தன்மைகள் இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. சில ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஜம்புப்பழம் விற்றமின் "சி" கூடிய உணவாகவும், நார்த்தன்மை கூடிய உணவாகவும் காணப்படுகின்றது. நார்த்தன்மை காரணமாக உடலின் கொழுப்புத் தன்மை அதாவது Cholesterol குறைவடைவதாக ஆய்வுகளிலிருந்து அறியப்படுகின்றது. சதையின் தொழிற்பாடு குறைவடைவதால் ஏற்படும் நீரிழிவு நோயாளிகளில் மாச்சத்து வெல்லமாக மாறுவதைக் கட்டுப்படுத்துகிறது.

ஜம்புப்பழ வித்தில் Jumboline என்ற இரசாயனப் பதார்த்தம் காணப்படுகின்றது. இது சலத்தில் வெளியேறும் வெல்லத்தின் அளவைக் குறைப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஜம்புப்பழம் மறைமுகமாக மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜம்புப் பழச்சாறு மூளை, ஈரல்களுக்கு நன்மையளிப்பதாகவும், ஜம்புப் பூவிலிருந்து பெறப்படும் சாறு காய்ச்சலைக் குறைப்பதாகவும் இலைகளிலிருந்து பெறப்படும் சாறு இருமல், மூட்டு வாதத்துக்கு பயன்படுவதாயும் சிறுநீரின் அளவை அதிகரிக்கும் (Diuretic) தன்மையைக் கொண்டிருப்பதாயும் ஆய்வுகள் கூறுகின்றன. ஜம்புப்பழ விதைகளில் உணர் வழியில் தன்மை இருப்பதாகவும், வேரில் வலிப்பு நோயைக் குறைக்கும் தன்மை காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. மருத்துவம் தவிர விதைகள் நீக்கப்பட்ட பழத்திலிருந்து பன்னீர், இலைச் சாற்றிலிருந்து வாசனைத் திரவியம் (perfume) மற்றும் மரத்திலிருந்து வயலின், கிற்றார் போன்ற இசைக் கருவிகளும் உருவாக்கப்படுகின்றன.

### நடுவது எப்படி?

கீழ்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு நடவேண்டும். 2 X 2 X 2 அடி நீளம், அகலம், ஆழம் கொண்ட குழி வெட்டவும். மரக்கன்றுகளை இயற்கை உரம் கொண்டு மூடவும். முதற்கிழமை ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றவும். இரண்டாவது கிழமை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் ஊற்றவும். மூன்றாவது கிழமை மூன்று நாட்களுக்கு ஒரு முறை நீரூற்றவும்.

மூன்று மாதங்கள் கடந்த பின் கீழ்ப்பகுதியில் உள்ள பக்க கிளைகளை கத்தரித்து விடுவதன் மூலம் நேராக வளர்க்க முடியும். சிறிய நிலப்பரப்புகள் உள்ள வீடுகளிலும் வளர்க்க முடியும். வருடத்துக்கு இரு தடவைகள் பழங்களைத் தரக் கூடியது. வலை கொண்டு மரத்தை மூடுவதன் மூலமும், பைகள் கொண்டு பழங்களை மறைப்பதன் மூலமும் பறவைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org